www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# ஆறாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

தொகுதி 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2018

(பொதுப் பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

www.tntextbooks.in

# பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை/இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | பாரதம் அன்றைய நாற்றங்கால் * | 2 |
| | | தமிழ்நாட்டில் காந்தி | 5 |
| | புதுமைகள் செய்யும் தேசமிது | வேலுநாச்சியார் | 9 |
| | | நால்வகைச் சொற்கள் | 13 |
| 2 | அறம், தத்துவம், சிந்தனை | பராபரக் கண்ணி * | 20 |
| | | நீங்கள் நல்லவர் | 22 |
| | எல்லாரும் இன்புற | பசிப்பிணி போக்கிய பாவை | 24 |
| | | பாதம் | 28 |
| | | பெயர்ச்சொல் | 32 |
| | | திருக்குறள் * | 38 |
| 3 | மனிதம், ஆளுமை | ஆசிய ஜோதி | 42 |
| | | மனிதநேயம் | 46 |
| | இன்னுயிர் காப்போம் | முடிவில் ஒரு தொடக்கம் | 50 |
| | | அணி இலக்கணம் | 53 |
| | | திருக்குறள் | 59 |


*( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

English Term III Pages 63 - 132

L3HUGB

*மின் நூல்*

L46QHY

*மதிப்பீடு*

B537_6_TAM_T3

*இணைய வளங்கள்*

www.tntextbooks.in

# ஆறாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி 1

# தமிழ்

இயல்
ஒன்று

# புதுமைகள் செய்யும் தேசமிது




## கற்றல் நோக்கங்கள்

- இந்திய நாட்டின் சிறப்புகளை அறிதல்
- வாழ்வில் எளிமையின் சிறப்பை உணர்தல்
- சமூக மாற்றத்தில் காந்தியின் பங்கினைத் தெரிந்து கொள்ளுதல்
- விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கினை அறிந்து போற்றுதல்
- சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

கவிதைப்பேழை

**இயல் ஒன்று**

# பாரதம் அன்றைய நாற்றங்கால்




நமது நாடு வளம் பொருந்தியது. இங்கு இயற்கை வளங்கள் மட்டுமன்றி இலக்கிய வளங்களும் மிகுந்துள்ளன. வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டது நமதுநாடு. இமயம் முதல் குமரி வரை வாழும் இந்தியர்கள் அனைவரும் உணவு, உடை, மொழி, நாகரிகம் ஆகியவற்றால் வேறுபட்டு இருந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவர்களே. தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றும் பாடலை அறிவோம் வாருங்கள்.

L4FLJL

*புதுமைகள் செய்த தேசமிது*
*பூமியின் கிழக்கு வாசலிது!*

*தெய்வ வள்ளுவன் நெய்த குறள்தான்*
*தேசம் உடுத்திய நூலாடை!*
*மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு*
*மெய்யுணர்வு என்கிற மேலாடை! (புதுமைகள்)*


*காளி தாசனின் தேனிசைப் பாடல்கள்*
*காவிரிக் கரையில் எதிரொலிக்க*
*கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்*
*கங்கை அலைகள் இசையமைக்க (புதுமைகள்)*


*கன்னிக் குமரியின் கூந்த லுக்காகக்*
*காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!*
*மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்*
*கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! (புதுமைகள்)*

*புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்*
*புன்னகை செய்த பொற்காலம்!*
*கல்லைக் கூட காவிய மாக்கிக்*
*கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)*

*அன்னை நாட்டின் அமுத சுரபியில்*
*அன்னிய நாடுகள்பசிதீர*
*அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி*
*அறத்தின் ஊன்று கோலாக*

*புதுமைகள் செய்த தேசமிது*
*பூமியின் கிழக்கு வாசலிது!**





*– தாராபாரதி*

### சொல்லும் பொருளும்

மெய்– உண்மை 　　　　 தேசம் – நாடு


### பாடலின் பொருள்

பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகின்றது. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன.

குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கின்றது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்றுகோலாக காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகின்றது.

#### நூல் வெளி



தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.

இப்பாடல் தாராபாரதியின் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலை இசையோடு பாடுக.
2. நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு என்னும் தலைப்பில் பேசுக.

# மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்

   அ) திருவாசகம் ஆ) திருக்குறள்

   இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

2. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்

   அ) காவிரிக்கரை ஆ) வைகைக்கரை இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை

3. கலைக்கூடமாகக் காட்சி தருவது

   அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

4. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) நூல்+ஆடை ஆ) நூலா+டை இ) நூல்+ லாடை ஈ) நூலா+ஆட

5. எதிர்+ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க இ) எதிரொலிக்க ஈ) எதிர்ரொலிக்க

நயம் அறிக

பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.

L4PHL9

சிறுவினா

தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக.

சிந்தனைவினா

நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.

உரைநடை உலகம்

இயல் ஒன்று

# தமிழ்நாட்டில் காந்தி

L4YDMH

நுழையும்முன்

காந்தியடிகள் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர் என்பதை நாடு நன்கு அறியும். பெண்கள் முன்னேற்றம், சமுதாய மறுமலர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றுக்காகவும் அவர் பாடுபட்டார். எளிமையை ஓர் அறமாகப் போற்றினார். இந்தியாவில் அவர் காலடி படாத இடமே இல்லை. தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் காந்தியடிகள் கொண்ட பற்றினைக் காண்போம் வாருங்கள்.




மதுரையில் உள்ள காந்தி அருங்காட்சியகம்

காந்தியடிகளுக்குத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த அன்பு உண்டு. அவர் பலமுறை தமிழ்நாட்டில் பயணம் செய்துள்ளார். அப்போது சுவையான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார். அப்போது ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனை எதிர்த்துப் பெரிய போராட்டத்தை நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். அதைப் பற்றிய கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது. காந்தியடிகள் ஒரு மெத்தையில் அமர்ந்து இருந்தார். அவருக்கு அருகில் இராஜாஜியும் மற்ற தலைவர்களும் நின்றுகொண்டு இருந்தனர்.

அப்போது அங்கு வந்த பாரதியார் விரைந்து சென்று காந்தியடிகளின் அருகில் அமர்ந்தார். "திரு. காந்தி அவர்களே! நான் இன்று மாலை ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதற்குத் தாங்கள் தலைமைதாங்க முடியுமா?" என்று கேட்டார். "இன்று எனக்கு வேறு பணி இருக்கிறது. உங்கள் பொதுக்கூட்டத்தை நாளை நடத்த முடியுமா?" என்று கேட்டார் காந்தியடிகள். "அது முடியாது. திட்டமிட்டபடி கூட்டம் நடக்கும். தாங்கள் தொடங்கப்போகும் இயக்கத்துக்கு என் வாழ்த்துகள்" என்று கூறிய பாரதியார் "நான் போய் வருகிறேன்" என்று கூறி எழுந்து சென்றுவிட்டார்.

அவர் சென்றதும் "இவர் யார்?" என்று காந்தி வியப்புடன் கேட்டார். "இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர்" என்றார் இராஜாஜி. "அப்படியா? இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்றார் காந்தியடிகள். இந்நிகழ்ச்சியின் மூலம் பாரதியார் பற்றிய காந்தியடிகளின் மதிப்பீட்டை அறியலாம்.



1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார். அப்போது காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள். தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார். அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார். அவரது தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்தக் கோலத்திலேயே தம் வாழ்நாள் முழுவதும் இருந்தார். உலகம் போற்றிய எளிமைத் திருக்கோலம் இதுவாகும்.


காந்தியடிகள் ஒருமுறை காரைக்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது கானாடுகாத்தான் என்னும் ஊரில் ஒரு பணக்காரர் வீட்டில் தங்கி இருந்தார். அந்த வீடு மிகவும் ஆடம்பரமாக இருந்தது. வீட்டில் எங்குப் பார்த்தாலும் வெளிநாட்டு அலங்காரப் பொருள்கள் நிறைந்து இருந்தன. காந்தியடிகள் அந்தப் பணக்காரரிடம், "உங்கள் வீட்டை வெளிநாட்டுப் பொருள்களால் அழகு செய்து இருக்கிறீர்கள். அதற்குச் செலவு செய்த பணத்தில் பத்தில் ஒரு பங்கு

www.tntextbooks.in

பணத்தை என்னிடம் கொடுத்தால் போதும். இதை விட அழகாகச் செய்து விடுவேன்" என்று கூறினார். பணக்காரர் தலைகுனிந்தார். அந்த வீட்டுக்குக் காந்தியடிகள் மறுமுறை வந்தபோது அங்கே வெளிநாட்டுப் பொருள்கள் ஒன்றுகூட இல்லை. காந்தியடிகள் மகிழ்வுடன் அவரைப் பாராட்டினார்.

காந்தியடிகள் ஒருமுறை மதுரையில் தங்கி இருந்தார். மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று வரலாம் என்று தலைவர்கள் அவரை அழைத்தனர். "அந்தக் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி உண்டா?" என்று காந்தியடிகள் கேட்டார். அங்கு இருந்தவர்கள் "இல்லை" என்றனர். "அப்படியானால் அங்கே வரமாட்டேன்" என்று கூறிவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கோவிலுக்குள் செல்ல அனைவருக்கும் உரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு மதுரைக்கு வந்த போதுதான் காந்தியடிகள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் சென்றார்.

இதே போன்ற நிகழ்ச்சி குற்றாலத்திலும் நடைபெற்றது. குற்றால அருவியில் நீராட அனைவருக்கும் உரிமை அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அருவிக்குச் செல்லும் வழியில் ஒரு கோவில் இருந்தது. அதன் வழியாகச் செல்ல ஒருசாராருக்குத் தடை இருந்தது. எனவே அனைவரும் அருவியில் நீராட முடியாத நிலை இருந்தது. அதனை அறிந்த காந்தியடிகள் குற்றால அருவியில் நீராட மறுத்துவிட்டார். மனிதர்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்ததை இதன்மூலம் அறிய முடிகிறது.



காந்தியடிகளின் தமிழ்க் கையெழுத்து

காந்தியடிகள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாகக் கூறியுள்ளார். ஜி.யு.போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார். திருக்குறள் அவரைக் கவர்ந்த நூலாகும்.

1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

இந்நிகழ்வுகள் மூலம் ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் மலர வேண்டும் என்னும் காந்தியடிகளின் உள்ள உறுதியை அறிந்து கொள்ளலாம். மேலும் அவர் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

www.tntextbooks.in

## கற்பவை கற்றபின்

1. காந்தியடிகளின் பொன்மொழிகளைத் திரட்டுக.
2. காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களின் பெயர்களைத் தொகுக்க.

## மதிப்பீடு

L589PJ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. காந்தியடிகளிடம் உடைஅணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்

   அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

2. காந்தியடிகள் எந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்?

   அ) நாமக்கல் கவிஞர் ஆ) திரு.வி.க. இ) உ.வே.சா. ஈ) பாரதியார்

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. இலக்கிய மாநாடு | - | பாரதியார் |
| 2. தமிழ்நாட்டுக் கவிஞர் | - | சென்னை |
| 3. குற்றாலம் | - | ஜி.யு.போப் |
| 4. தமிழ்க் கையேடு | - | அருவி |

**சொற்றொடரில் அமைத்து எழுதுக**

1. ஆலோசனை 2. பாதுகாக்க 3. மாற்றம் 4. ஆடம்பரம்

**குறுவினா**

1. காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக?

**சிறுவினா**

1. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

**சிந்தனை வினா**


காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளாக நீங்கள் கருதுபவை யாவை?

விரிவானம்

இயல் ஒன்று

# வேலுநாச்சியார்

L5H5R7




வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் சிறிது சிறிதாக நமது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர்கள் பலர். அவர்களுள் வெற்றி பெற்றவர்கள் சிலரே. வீரமும் அதனால் விளையும் வெற்றியும் போருக்கு முக்கியமானவை. சூழ்நிலைக்கேற்பச் செயல்பட்டுப் பெறும் வெற்றியே சிறந்தது. விடுதலைப்போரில் ஆண்களுக்கு நிகராகச் செயல்பட்டு வெற்றி வாகை சூடிய பெண்களுள் ஒருவரைப் பற்றி அறிவோம் வாருங்கள்.



இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார். சிலம்பம், குதிரைஏற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.

காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

**எட்டு ஆண்டுகளுக்குப் பின்...**

திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே வீரமங்கை வேலுநாச்சியார் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.

"நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன" வேலுநாச்சியார் கவலை நிறைந்த குரலில் கூறினார்.

"கவலைப்படாதீர்கள் அரசியாரே, நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றார் வேலுநாச்சியார்.

அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது. "மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்துவிட்டது என நினைக்கிறேன்" என்றார் வேலுநாச்சியார்.

அப்போது அறையின் வாயிலில் வீரன் ஒருவன் வந்து நின்றான். "அரசியாருக்கு வணக்கம். மைசூரில் இருந்து ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் வந்துள்ளனர்" என்றான். "அப்படியா? மகிழ்ச்சி. அவர்களை ஓய்வு எடுக்கச் சொல். நான் பிறகு வந்து பார்க்கிறேன்" என்றார் வேலுநாச்சியார். வீரன் வெளியேறினான்.

"ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"நாம் இருவரும் ஐதர்அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்" என்றார் தாண்டவராயர்.



"நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது" என்றார் சின்ன மருது.

"ஆம். நமது வீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களும் சேர்ந்து விட்டனர். ஆகவே நாளை சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் அல்லவா?" என்று கேட்டார் பெரிய மருது.

"என் கணவர் கொல்லப்பட்ட ஊர் காளையார்கோவில். எனவே நாம்

முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை மீட்போம்" என்றார் வேலு நாச்சியார். அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர். மறுநாள் காளையார்கோவில் நோக்கி வேலுநாச்சியார் படை புறப்பட்டது. ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.

"அரசியார் அவர்களே! காளையார்கோவில் நம் கைக்கு வந்து விட்டது. நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்" என்றார் பெரிய மருது. "அவசரம் வேண்டாம். இப்போது சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விசயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது நமது படைகள் உள்ளே நுழையலாம்" என்றார் வேலுநாச்சியார்.

"அப்போதும் பெரிய காவல் இருக்குமே" என்றார் சின்ன மருது.

"விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. நமது பெண்கள் பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு கோட்டைக்குள் செல்லட்டும். உள்ளே அவர்கள் தாக்குதலைத் தொடங்கியதும் நமது ஆண்கள் பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கட்டும். ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்" என்றார் வேலுநாச்சியார்.


நடுகல்

"அப்படியே செய்யலாம் அரசியாரே. இன்னும் ஒரு செய்தி. தங்களைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்களாம். அவர் மறுத்ததால் கொன்றுவிட்டார்களாம். அவருக்கு நாம் உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும்" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"அவருக்கு ஒரு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே. அவரது பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்" என்றார் வேலுநாச்சியார்.

"அப்படியே செய்வோம்" என்றார் அமைச்சர்.

விசயதசமிக்கு முதல் நாள் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டது படை. வழியில் உடையாளுக்காக நடப்பட்ட நடுகல் முன்பு குதிரையில் இருந்து இறங்கினார் வேலுநாச்சியார். தாம் வைத்திருந்த தாலியை எடுத்து அந்த நடுகல்லுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். அருகில் நின்ற வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக" என்று முழக்கமிட்டனர்.

படை மறுநாள் காலை சிவகங்கையை அடைந்தது.

"அரசியாரே, நான் நமது பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே செல்கிறேன். உள்ளே சென்றதும் அங்குள்ள ஆயுதக் கிடங்குக்கு எப்படியாவது தீ வைத்து விடுகிறேன். தீ எரிவது தெரிந்ததும் நம் படை உள்ளே நுழையட்டும்" என்று கூறினார் குயிலி.

### தெரிந்து தெளிவோம்

வேலுநாச்சியாரின் காலம் 1730–1796

வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780.

ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலு நாச்சியார்.

"அப்படியே ஆகட்டும்" என்றார் வேலு நாச்சியார்.

குயிலியும் பெண்கள் படையினரும் கோட்டைக்குள் சென்றனர். சிறிது நேரத்தில் கோட்டைக்குள் பெரும் கூச்சல் எழுந்தது. உள்ளே உயரமாகத் தீ எரிவது தெரிந்தது.

"நமது படை உள்ளே நுழையட்டும்" என்று ஆணையிட்டார் வேலுநாச்சியார். படை வீரர்கள் கோட்டைக்குள் பாய்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர். இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையைவிட்டு ஓடியது.

"வெற்றி வெற்றி" என்று முழக்கமிட்டனர் வீரர்கள்.

"இந்த வெற்றிக்குக் காரணமான குயிலி எங்கே?" என்று கேட்டார் வேலுநாச்சியார்.

"குயிலி தம் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்" என வீரர்கள் கூறினார்கள்.

"குயிலி தம் உயிரைத் தந்து நம்நாட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலைவணங்குகிறேன்" என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் வேலுநாச்சியார்.

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்

இக்கதையை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

L5R1SU

## மதிப்பீடு

1. வேலுநாச்சியார் ஐதர்அலியின் உதவியை எவ்வாறு பெற்றார்?
2. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.

கற்கண்டு

# இயல் ஒன்று

# நால்வகைச் சொற்கள்

L5ZHUH

தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும். இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.

(எ.கா.) ஈ, பூ, மை, கல், கடல், தங்கம்.

இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

## பெயர்ச்சொல்

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

(எ.கா.) பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, ஓடுதல்.

## வினைச்சொல்

வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

(எ.கா.) வா, போ, எழுது, விளையாடு.

## இடைச்சொல்

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து இயங்காது.

(எ.கா.) உம் – தந்தையும் தாயும்

மற்று - மற்றொருவர்

ஐ - திருக்குறளை

## உரிச்சொல்

பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்

(எ.கா.) மா – மாநகரம்

சால - சாலச்சிறந்தது

## கற்பவை கற்றபின்

பின்வரும் தொடர்களில் உள்ள நால்வகைச் சொற்களை வகைப்படுத்துக.

1. வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்.
2. நாள்தோறும் திருக்குறளைப் படி.
3. ஏழைக்கு உதவுதல் சாலச்சிறந்தது என்றார் ஆசிரியர்.
4. கீழ்க்காணும் குறளில் உள்ள இடைச்சொல்லை எழுதுக.

   ***மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்***
   ***சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.***

செய்தித்தாளில் விளையாட்டுச் செய்தி ஒன்றைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.

L69SH5

## மதிப்பீடு

சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. அ) படித்தாள் | ஆ) ஐ | இ) மற்று | ஈ) கு |
| 2. அ) மதுரை | ஆ) கால் | இ) சித்திரை | ஈ) ஓடினான் |
| 3. அ) சென்ற | ஆ) வந்த | இ) சித்திரை | ஈ) நடந்த |
| 4. அ) மாநாடு | ஆ) ஐ | இ) உம் | ஈ) மற்று |

### குறுவினாக்கள்

1. சொல் என்றால் என்ன?
2. சொற்களின் வகைகளை எழுதுக.
3. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?

### சிந்தனை வினா

நால்வகைச் சொற்களில் தனித்து இயங்குபவை எவை? எடுத்துக்காட்டுகள் தருக.

## மொழியை ஆள்வோம்!

### கேட்க

தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவரின் வரலாற்றைக் கேட்க.

### கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.

1. பாரதியார் 2. காந்தியடிகள் 3. வேலுநாச்சியார்

### சொல்லக் கேட்டு எழுதுக

இந்தியநாடு காந்தியடிகள் ஊன்றுகோல் வேலுநாச்சியார்

வாழ்த்துகள் மெய்யுணர்வு நாற்றங்கால் உரிச்சொல்

பொதுக்கூட்டம் குற்றாலம்

### கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

1. சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் யார்?
2. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?
3. வ. உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?
4. வ. உ. சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை?
5. வ. உ. சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?

### இடம் அறிந்து பயன்படுத்துவோம்

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) ஓர் ஊர் ஓர் ஏரி

ஒரு நகரம் ஒரு கடல்

இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) அஃது இங்கே உள்ளது

அது நன்றாக உள்ளது

### கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.
3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
5. அது ஒரு இனிய பாடல்.

### அகரவரிசைப்படுத்துக

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு.

### செயல்திட்டம்

காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.



## மொழியோடு விளையாடு

### இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கு.

(எ.கா.) எனக்கு எனக்குண்டு எனக்கில்லை

| | | | |
|---|---|---|---|
| வடக்கு | | ------------- | ------------- |
| பந்து | உண்டு | ------------- | ------------- |
| பாட்டு | இல்லை | ------------- | ------------- |

**கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| பாரி | | வந்தன |
| எழிலி | | வந்தான் |
| மாணவர்கள் | வீட்டுக்கு | வந்தது |
| மாடு | | வந்தார்கள் |
| மாடுகள் | | வந்தாள் |

**கட்டங்களில் மறைந்துள்ள நால்வகைச் சொற்களை எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | ம் | பே | சி | வ | ன் |
| ம | ர | ரு | ப | ண் | தா |
| ர | க | ந் | று | டி | ய் |
| ன் | ந | து | உ | ம் | செ |
| ஐ | மா | டு | ம | ற் | று |
| ந | ட | க் | கி | றா | ள் |

**எ.கா: குமரன் – பெயர்ச்சொல்**

## நிற்க அதற்குத் தக...

### என் பொறுப்புகள்

தாய் தந்தையின் வீட்டு வேலைகளில் என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

பள்ளி, பொது இடங்களில் உள்ள பொருட்களை உடைக்காமல் பாதுகாப்பேன்.

தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தேசியக்கொடி முதலியவற்றிற்கு உரிய மரியாதை தருவேன்.

### கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாட்டுப்பற்று | - | *Patriotism* | இலக்கியம் | - | *Literature* |
| கலைக்கூடம் | - | *Art Gallery* | மெய்யுணர்வு | - | *Knowledge of Reality* |

## இணையத்தில் காண்க

விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழகத் தலைவர்கள் பற்றிய செய்திகளை அறிக.

## இணையச் செயல்பாடுகள்

### சொல் விளையாட்டு







படிநிலைகள்:


⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, "சொல்லி அடி" செயலியை நிறுவுக.

⇒ செயலியைத் திறந்தவுடன் வரும் திரையில் கொடுக்கப்பட்டிருக்கும் 'படம் பார்த்துக் கண்டுபிடி', 'குறிப்புகள் மூலம் கண்டுபிடி', 'சொல்லுக்குள் சொல்', 'பிற மொழிச்சொற்கள்', 'எதிர்ச் சொற்கள்' மற்றும் 'இணைச்சொற்கள்' போன்ற தெரிவுகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்க.

⇒ எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டிருக்கும் படங்களைக்கொண்டு அதன் பெயர்களை அடையாளம் காணுதல். இதே போன்று பிற விளையாட்டுகளின் மூலம் சொற்களஞ்சிய அறிவை வளர்த்துக் கொள்க.




செயல்பாட்டிற்கான உரலி

*https://play.google.com/store/apps/details?id=nithra.tamil.word.game.solliadi*


ஒத்த பிற செயலிகள்

1. மாயக்கட்டம் 2. புதிர்நானூறு 3. திருக்குறள் விளையாட்டு

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

## இயல் இரண்டு

# எல்லாரும் இன்புற




## கற்றல் நோக்கங்கள்

- எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்தல், பிறருக்கு உதவி செய்தல் போன்ற அறச்சிந்தனைகளை அறிதல்
- வாழும் முறைகளை அறிதல்
- பிறர் பசியைப் போக்கும் உயர் சிந்தனையை வளர்த்தல்
- பெற்றோரையும் பெரியோர்களையும் மதிக்கும் பண்பு பெறுதல்
- பிறர் பொருளை விரும்பாமை ஓர் அறம் என்பதை உணர்தல்
- அறுவகைப் பெயர்கள், இடுகுறிப்பெயர், காரணப்பெயர்களை அறிதல்

இயல் இரண்டு

கவிதைப்பேழை

# பராபரக் கண்ணி




அற இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியவை. அவை வாழ்வியல் நெறிகளையும் ஒழுக்கங்களையும் விளக்குபவை. நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள் உலகம் முழுமைக்கும் பொதுவானவை. அற இலக்கியங்கள் கூறும் கருத்துகளைக் கடைப்பிடித்து வாழ்வதே சிறந்த வாழ்வு. அவற்றை நாமும் பின்பற்றுவோம்; வாழ்வை வளமாக்குவோம்.

1. ***தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்***
***செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!****

### சொல்லும் பொருளும்

தண்டருள் - குளிர்ந்த கருணை
கூர் - மிகுதி
செம்மையருக்கு - சான்றோருக்கு
ஏவல் - தொண்டு
பராபரமே - மேலான பொருளே

### பாடலின் பொருள்

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

2. ***அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்***
***இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!***

### சொல்லும் பொருளும்

பணி - தொண்டு
எய்தும் - கிடைக்கும்

### பாடலின் பொருள்

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

3. ***எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே***
***அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!****


### சொல்லும் பொருளும்

எல்லாரும் - எல்லா மக்களும்
அல்லாமல் - அதைத்தவிர

### பாடலின் பொருள்

எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன்.

### நூல் வெளி



இப்பாடலை எழுதியவர் தாயுமானவர். திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி புரிந்தவர்.

இப்பகுதி தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் உள்ளது. இந்நூலைத் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றுவர். இப்பாடல்கள் 'பராபரக் கண்ணி' என்னும் தலைப்பில் உள்ளன. 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகை.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள் பற்றிக் கூறுக.
2. நீங்கள் பிறர் மகிழும்படி செய்த நிகழ்வுகளைக் கூறுக.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------
   அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்
2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் --------
   அ) இன்புற்றிருக்க ஆ)இன்புறுறிருக்க இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறு இருக்க
3. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------
   அ) தானெ + என்று ஆ)தான் + என்று இ) தா + னென்று ஈ) தான் + னென்று
4. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ----------
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

### நயம் அறிக

பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

### குறுவினா

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?

### சிறுவினா

பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

### சிந்தனைவினா


குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?

L6SJZF


கவிதைப்பேழை

இயல் இரண்டு

# நீங்கள் நல்லவர்




இலக்கியங்கள் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தி அறவழியில் செலுத்துகின்றன. மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகின்றன. கவிஞர்கள் வாழ்வின் பொருளை உணர்த்தும் உயர்ந்த சிந்தனைகளைக் கூறியுள்ளனர். அத்தகைய சிந்தனைகளைக் கூறும் கவிஞர்கள் உலகெங்கும் உள்ளனர். அயல்நாட்டுக் கவிஞர் ஒருவரின் சிந்தனைகளை அறிவோம் வாருங்கள்.



*வாழ்க்கை பின்திரும்பிச் செல்லாது*
*நேற்றுடன் ஒத்துப் போகாது*
*கொடுப்பவரின் பரிசுடன்*
*அவருக்குச் சமமாக எழுங்கள்*
*சிறகுகளின் மீது எழுவது போல*

*உழைக்கும்போது நீங்கள்*
*புல்லாங் குழலாகி விடுகிறீர்கள்*
*அதன் இதயம் காலத்தின் கிசுகிசுப்பை*
*ஓர் இசையாக மாற்றி விடுகிறது*
*உங்களுக்குள் இருக்கும்*
*நன்மையைப்பற்றித்தான்*
*நான் பேச முடியும்*
*தீமையைப் பற்றியல்ல*

*உங்கள்சுயத்துடன்*
*நீங்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கும்போது*
*நீங்கள் நல்லவர்*
*என்னைப்போல் இரு*
*பழுத்து உன் உள்ளீடுகளை எல்லாம்*
*முழுசாய்க்கொடு என்று*
*பழம் வேரைப் பார்த்து*
*நிச்சயமாகச் சொல்லாது*
*கொடுப்பது பழத்தின் இயல்பு*
*பெறுவது வேரின் இயல்பு*

L72G23

*உங்கள் பேச்சின் போது*
*நீங்கள் விழிப்புணர்ச்சியுடன்*
*இருப்பது நல்லது*
*உறுதியாகக் கால்பதித்து*
*உங்கள் குறிக்கோளை நோக்கி நடக்கையில்*
*நீங்கள் நல்லவர்*

– கலீல் கிப்ரான்

**சொல்லும் பொருளும்**

சுயம் - தனித்தன்மை உள்ளீடுகள் - உள்ளே இருப்பவை

**நூல் வெளி**



**கலீல் கிப்ரான்** லெபனான் நாட்டைச் சேர்ந்தவர். கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர்.

இப்பாடப்பகுதி கவிஞர் **புவியரசு** மொழிபெயர்த்த **தீர்க்கதரிசி** என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. உங்களது நிறை குறைகளைப் பட்டியலிடுக.
2. உங்கள் நண்பர் மனம் சோர்ந்து இருக்கும்போது அவரைத் தேற்றும் வழிகள் குறித்துக் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

L7BC3Q

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. பரிசு பெறும்போது நம் மனநிலை ……………… ஆக இருக்கும்.
   அ) கவலை ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு
2. வாழ்வில் உயர கடினமாக ……………… வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

*குறுவினா*

1. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
2. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?

*சிறுவினா*

நீங்கள் நல்லவர் என்னும் இப்பாடல் விளக்கும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

*சிந்தனை வினா*


1. நல்லவர் என்னும் பெயர் பெற நாம் என்ன செய்யலாம்?
2. உங்கள் குறிக்கோளை அடைய நீங்கள் செய்யும் முயற்சிகளை எழுதுக.

உரைநடை உலகம்

இயல்
இரண்டு

# பசிப்பிணி போக்கிய பாவை

நாடகம்




உலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் இன்றியமையாதது உணவு. உலக உயிர்கள் அனைத்தும் வாழ்நாள் முழுவதும் உணவு தேடியே உழைக்கின்றன. உணவே உயிர்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது. "தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இச்செகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவு அளிப்பது உயிர் கொடுப்பதற்கு இணையானது. அதுவே சிறந்த அறமாகும்.

## காட்சி – 1

L7K85D

இடம் : மணிபல்லவத் தீவு

கதை மாந்தர்கள் : மணிமேகலை, தீவதிலகை.

மணிமேகலை : (தனக்குள்)
எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள். பூத்துக் குலுங்கும் செடிகொடிகள். அடர்ந்த மரங்கள். இடையே பொய்கைகள். மனதை மயக்கும் காட்சிகள் . . . ஆகா! . . . அருமை! அருமை.!
(அப்போது அவள் எதிரில் தீவதிலகை வருகிறாள்)

தீவதிலகை : அழகிய பெண்ணே! நீ யார்? இங்கு எப்படி வந்தாய்?

மணிமேகலை : நான் பூம்புகார் நகரைச் சேர்ந்தவள். என் பெயர் மணிமேகலை. மணிமேகலா தெய்வம் என்னை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது. நீங்கள் யார் அம்மா? நீங்கள் எப்படி இத்தீவிற்கு வந்தீர்கள்?

தீவதிலகை : என் பெயர் தீவதிலகை. நான் இத்தீவையும் இதிலுள்ள புத்த பீடிகையையும் காவல் செய்து வருகிறேன். பெருமை மிக்கவர்கள் மட்டுமே இத்தீவிற்கு வந்து இந்தப் புத்த பீடிகையை வணங்க முடியும். நீ அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறாய். இன்னும் நீ அறியவேண்டியது ஒன்று உண்டு.

மணிமேகலை : அஃது என்ன அம்மா?

தீவதிலகை : நம் எதிரில் பூக்கள் நிறைந்து விளங்கும் இந்தப் பொய்கையைப் பார். இதற்குக் கோமுகி என்று பெயர். 'கோ' என்றால் பசு. முகி என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் இப்பொய்கை கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.

மணிமேகலை : ஓ! அப்படியா! வடிவத்திற்கு ஏற்ற பெயராக இருக்கிறதே!

தீவதிலகை : இப்பொய்கைக்கு வேறு ஒரு சிறப்பும் உண்டு. வைகாசித் திங்கள் முழு நிலவு நாளில் இப்பொய்கை நீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் தோன்றும். அஃது ஆபுத்திரன் கையிலிருந்த 'அமுதசுரபி' என்னும் பாத்திரம் ஆகும்.

மணிமேகலை : அமுதசுரபியா? அதன் சிறப்பு என்ன?

தீவதிலகை : அந்தப் பாத்திரத்தில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். அதனைக் கொண்டு எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் உணவு அளிக்கலாம்.

மணிமேகலை : அப்படியா? வியப்பாக உள்ளதே?

தீவதிலகை : ஆம். அந்தப் பாத்திரம் தோன்றும் வைகாசி முழுநிலவு நாள் இன்றுதான்.

(இவ்வாறு தீவதிலகை சொல்லிக் கொண்டிருக்கும் போதே பொய்கையின் நீருக்குமேல் அப்பாத்திரம் தோன்றுகிறது. மணிமேகலை அதனை வணங்கிக் கையில் எடுக்கிறாள்).

தீவதிலகை : மணிமேகலையே! உயிர்களின் பசிபோக்கும் அமுதசுரபியை நீ பெற்றுள்ளாய். இனி இவ்வுலக உயிர்களுக்குப் பசி இல்லாமல் போகும்படி உணவு வழங்கி உயர்வு பெறுவாயாக!

(மணிமேகலை தீவதிலகையை வணங்கி அமுதசுரபியுடன் விடை பெறுகிறாள்.

பூம்புகாருக்குத் திரும்புகிறாள். ஆதிரையிடம் உணவு பெறச் செல்கிறாள்.)

### காட்சி – 2.

இடம் : ஆதிரையின் இல்லம்

கதை மாந்தர்கள் : ஆதிரை, மணிமேகலை

(ஆதிரையின் வீட்டு வாயிலில் மணிமேகலை கையில் அமுதசுரபியுடன் வந்து நிற்கிறாள்)

ஆதிரை : யார் நீங்கள் ?

மணிமேகலை : இவ்வூரில் வாழ்ந்த கோவலன், மாதவி ஆகியோரின் மகள் நான். உங்களின் சிறப்பை அறிந்து இப்பாத்திரத்தில் உணவு பெற வந்தேன்.


ஆதிரை : ஓ! நீங்கள் தான் மணிமேகலையா? உங்கள் பெற்றோரைப் பற்றி அறிவேன். உங்களை இன்று தான் காண்கிறேன். இஃது என்ன பாத்திரம்? மிகவும் அழகாக இருக்கிறதே!

மணிமேகலை : இது அள்ள அள்ளக் குறையாமல் உணவு வழங்கும் 'அமுதசுரபி' ஆகும்.

ஆதிரை : இப்பாத்திரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

(மணிமேகலை மணிபல்லவத் தீவில் அமுதசுரபி பெற்ற வரலாற்றைக் கூறுகிறாள்.)

ஆதிரை : (வியப்புடன்) அப்படியா? அமுதசுரபியின் சிறப்பை அறிந்தேன். அதில் இப்போதே உணவு இடுகின்றேன். ஆமாம். இதைக் கொண்டு என்ன செய்வீர்கள்?



மணிமேகலை : அன்பிற்குரிய ஆதிரையே, ஏழை மக்களின் பசியைப் போக்குவதே மேலான அறம். உணவு கொடுத்தவர்களே உயிரைக் கொடுத்தவர்கள் என்பதை உணர்ந்துள்ளேன். அதனால் இந்தப் பாத்திரத்தில் இருக்கும் உணவைப் பசியால் வாடும் மக்களுக்கு எல்லாம் வழங்கப் போகின்றேன்.

ஆதிரை : மிகவும் மகிழ்ச்சி. உங்கள் அறம் செழிக்கட்டும். மக்களின் பசிநோய் ஒழியட்டும். இதோ இப்போதே அமுதசுரபியில் நான் உணவை இடுகிறேன்.

(ஆதிரை அமுதசுரபியில் உணவை இடுகிறாள். மணிமேகலை அமுதசுரபியைக் கொண்டு, உடல் குறையுற்றோர், பிணியாளர், ஆதரவு அற்றோர் ஆகியோருக்கு உணவு அளிக்கிறாள். பின்னர்ப் பூம்புகாரில் உள்ள சிறைச்சாலைக்குச் சென்று அங்கு உள்ளவர்களுக்கும் உணவிடுகிறாள்)

**காட்சி – 3**

இடம் : அரண்மனை

கதை மாந்தர்கள் : சிறைக்காவலர், மன்னர், மணிமேகலை.

சிறைக்காவலர் : வேந்தே! வணக்கம். இன்று காலை நம் சிறைச்சாலைக்கு இளம்பெண் ஒருத்தி வந்தாள். அவள் கையில் ஒரு சிறிய பாத்திரம் இருந்தது. அந்தச் சிறிய பாத்திரத்திலிருந்து உணவை அள்ளி அள்ளிச் சிறையில் இருந்த அனைவருக்கும் வழங்கினாள். ஆனால், அந்தப் பாத்திரத்தில் இருந்த உணவு குறையவே இல்லை.

மன்னர் : (வியப்புடன்) என்ன! ஒரு சிறிய பாத்திரத்திலிருந்து உணவை எடுத்து அத்தனை பேருக்கும் வழங்கினாளா? அப்பெண்ணை உடனே அழைத்து வா.

சிறைக் காவலர் : ஆகட்டும் மன்னா.

(சிறைக்காவலர்கள் மணிமேகலையை மன்னரிடம் அழைத்து வருகின்றனர்)

மணிமேகலை : (மன்னரை வணங்கி) அருள் உள்ளம் கொண்ட அரசே! வணக்கம்.

மன்னர் : பெண்ணே! நீ யார்? உணவு அள்ள அள்ளக் குறையாத இப்பாத்திரத்தின் பெயர் என்ன? இஃது உனக்கு எப்படிக் கிடைத்தது?

(மணிமேகலை தனக்கு அமுதசுரபி கிடைத்த வரலாற்றைக் கூறுகிறாள்)

மன்னர் : (மிக்க மகிழ்ச்சியுடன்) மாதவம் செய்தவளே! இந்த உலக மக்களின் பசிப்பிணி தீர்க்கும் பாங்குடைய அறத்தைச் செய்கிறாய். நான் உனக்குச் செய்ய வேண்டிய உதவி ஏதேனும் இருக்கிறதா?

மணிமேகலை : அன்பால் ஆட்சி செய்யும் அரசே! சிறைச்சாலையில் தண்டனை பெற்றுள்ளவர்கள் திருந்தி வாழ வழிகாண வேண்டும். சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டும்.

மன்னர் : அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும்?

மணிமேகலை : வாழ்க்கைக்கு அறம் சொன்ன வள்ளுவர் வாழ்ந்த நாடு இது. புத்தர் பிறந்து அறம் போதித்த பூமி இது. எவை நன்மைகள் எவை தீமைகள் என்பவற்றை எல்லாம் தக்க அறிஞர்களைக் கொண்டு சிறையில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். மேலும் அவர்களுக்குப் பெற்றோரை மதித்தல், முதியோரைப் பேணல், உறவினர்களை அரவணைத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் அறநெறிக் கல்வியை அளிக்க வேண்டும். இதுவே என் வேண்டுகோள் மன்னா!

மன்னர் : நல்லறம் புரியும் நங்கையே! உன் வேண்டுகோள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த ஆணை இடுகிறேன். நீ வாழ்க! உன் அறம் வளர்க!

மணிமேகலை : நன்றி மன்னா! (வணங்கி விடைபெறுகிறாள்).

## கற்பவை கற்றபின்

1. பசிப்பிணி போக்கிய பாவை நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக.
2. பசிப்பிணி போக்கிய பாவை என்னும் நாடகத்தைக் கதை வடிவில் சுருக்கி எழுதுக.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ………………
   அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத் தீவு இ) மணிபல்லவத் தீவு ஈ) மாலத் தீவு
2. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ……………
   அ) சித்திரை ஆ) ஆதிரை இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

### சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) செடிகொடிகள் ஆ) முழுநிலவு நாள் இ) அமுதசுரபி ஈ) நல்லறம்

### குறுவினா

1. அமுதசுரபியின் சிறப்பு யாது?
2. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

### சிறுவினா

1. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?
2. 'கோமுகி" என்பதன் பொருள் யாது?

### சிந்தனை வினா


அறச்செயல்கள் என்று நீங்கள் எவற்றை எல்லாம் கருதுகிறீர்கள்?

L7U471

இயல் இரண்டு

விரிவானம்

# பாதம்




கதை என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். கதையை விரும்பாதவர் யாரும் இருக்க மாட்டார்கள். அதிலும் நம்ப முடியாத கற்பனைகளைக் கொண்ட விந்தைக் கதைகள் அனைவரையும் கவரும். கதையில் சிறந்த கருத்தும் கூறப்படுமானால் அது சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல மேலும் சுவையாக இருக்கும். அத்தகைய கதை ஒன்றைப் படிப்போமா?

என்றைக்கும்போல் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருந்தார் காலணி தைக்கும் மாரி. காலையிலே துவங்கிய மழை இடைவிடாது தனது அரூப விரல்களால் நகரமெங்கும் எதையோ தேடுவதுபோல் படர்ந்து கொண்டிருந்தது. எவரேனும் காலணி தைக்க வரக்கூடுமோ எனப் பசியுடன் காத்திருந்தார். ஒரு டீ குடித்தால் கூடப் பசி அடங்கிவிடும். அதற்கும் ஒரு ரூபாய் வேண்டி இருக்கிறதே என்ற யோசனை தோன்றியது. வலுத்துப் பெய்யத் துவங்கியது மழை. காற்றும் மழையோடு சேர்ந்து கொண்டது. அந்த நீண்ட தெருவில் எவருமில்லை; அவரும் ஒரு மரமும் எட்டுப் பழைய செருப்புகளும் தவிர.

சினிமா தியேட்டரின் குறுகிய வலப்புறச் சந்தில் இருந்து குடையில்லாமல் நனைந்தபடி வெளிப்பட்ட சிறுமியொருத்தி ஒரு  அவர் அருகில் வந்து தனது இடக்கையில் வைத்திருந்த காலணி ஒன்றைக் குனிந்து தரையிலிட்டு, **தைத்து** வைக்கும்படி சொல்லிவிட்டு அவர் நிமிர்ந்து அவளைப் பார்க்கும் முன்பு தெருவில் ஓடி அடுத்த வளைவின் சுவர்களைக் கடந்து சென்றாள்.

அந்தக் காலணி இளம் சிவப்பு நிறத்தில் இருந்தது. வழக்கமான சிறுமிகளின் காலணிபோல அல்லாது வெல்வெட் தைத்துப் பூவேலை கொண்ட காலணியாக இருந்தது. அந்தக் காலணியில் சிறுமியின் பாதவாசனை படிந்திருந்தது. அது ஏதோ ஒரு பெயரிடப்படாத நறுமணம். கிழிசலைத் **தைத்து** வைத்துக் கொண்டு காத்திருந்தார். இப்போதே குடிக்கப் போகும் டீயின் ருசி நாக்கில் துளிர் விட்டது. காற்றும் மழையும் தீவிரமாகிச் சுழன்றன. பின் மதியம் அது ஓய்ந்த போது ஒளித் திவலைகள் ஆங்காங்கே தெரியத் துவங்கின.

அந்தச் சிறுமிக்காகக் காத்திருந்தார் மாரி. நிச்சயம் இரண்டு ரூபாய் கிடைக்கும். மாலைவரை அந்தச் சிறுமி வரவில்லை. ஆனால் மீண்டும் மழை வந்துவிட்டது. பின்பு



இரவு இரண்டாம் ஆட்டம் சினிமா வரை மரத்தடியில் காத்துக் கொண்டிருந்தார். அவள் வரவில்லை. மழைக்குப் பயந்து வீட்டிலேயே இருக்கக் கூடும் என நினைத்துக்கொண்டு காலணியைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார். அடுத்த நாள் காலை மழையில்லை. நல்லவெயில்.

இளம் சிவப்பான அந்தக் காலணியை எடுத்து மீண்டும் ஒருமுறை நன்றாகத் துடைத்து, தனது நீலநிற விரிப்பில் வைத்துவிட்டு மற்ற வேலைகளில் ஈடுபடத் துவங்கினார். அன்றும் அந்தச் சிறுமி வரவேயில்லை. மறந்துவிட்டாளா? இல்லை, யாரிடம் கொடுத்தோம் எனத் தெரியாமல் அலைகிறாளா தெரியவில்லையே என்றபடி இரவில் அதை வீட்டிற்கு எடுத்துப்போனார். மறுநாள், மூன்றாம் நாள் என நாட்கள் கடந்தபோதும் அவள் வரவேயில்லை. ஆனால் அவர் அந்தக் காலணியைத் தினமும் கொண்டுவந்து காத்துக்கிடந்தார்.

ஓர் இரவில் மாரியின் மனைவி அந்தக் காலணியைக் கண்டாள். அதன் வசீகரம் தொற்றிக்கொள்ளக் கையில் எடுத்துப் பார்த்தாள். சிறுமியின் காலணி போலிருந்தது. அதைப் போட்டுப் பார்க்க ஆசையாக இருந்தது. தனது வலது காலில் அந்தக் காலணியை நுழைத்துப் பார்த்தாள். அது அவளுக்குச் சரியாக இருந்தது. சிறுமியின் காலணி அவளுக்குப் பொருந்துகிறதே என்றவள் மற்றொரு காலணியைத் தேடிப் பையைக் கொட்டினாள். சப்தம்கேட்டு மாரி கோபமாக உள்ளே வந்தபோது, மனைவியின் வலக்காலில் இருந்த சிவப்புக் காலணியைக் கண்டார். ஆத்திரத்துடன் திட்டி, அவள் சொல்வதைக் கேட்காமல் கழற்றச் சொல்லிக் கிழிந்துவிட்டதா எனப் பார்க்கக் கையில் எடுத்து உயர்த்தினார். கிழியவில்லை. சிறுமியின் காலணி இவளுக்குத் தைத்தது போலச் சரியாக இருக்கிறதே என்ற வியப்புடன் அது ஒற்றைக் காலணி எனப் பிடுங்கிப் பையில் போட்டுக் கட்ட முயன்றார். அவள் முணுமுணுத்தபடி பின் வாசலுக்குப் போய்விட்டாள். காலணி அவருக்குள்ளும் ஆசையைத் தூண்டியது, போட்டுப் பார்க்கலாமென. தன் வலக்காலைச் சிறிய காலணியில் நுழைத்தபோது அது தனக்கும் சரியாகப் பொருந்துவதைக் காண திகைப்படைந்தார். இரண்டு வேறுபட்ட அளவுள்ள கால்களுக்கு எப்படி ஒரே காலணி பொருந்துகிறது. அவரால் யோசிக்க முடியவில்லை. எப்படியோ உரியவரிடம் அதை ஒப்படைத்துவிட வேண்டியது தனது வேலை என்றபடி பையில் போட்டுக் கொண்டார்.

மறுநாள் பகலில் உடன் தொழில் செய்யும் நபரிடம் இந்தக் காலணியின் விசித்திரம் பற்றிச் சொல்ல அவர் தன் வலக் காலைப் பொருத்திப் பார்த்தார். அவருக்கும் சரியாக இருந்தது. இச்செய்தி நகரில் பரவியது. அந்தக் காலணியைப் போட்டுப் பார்க்க ஆசை கொண்ட பலர் தினமும் வந்து அணிந்து தமக்கும் சரியாக உள்ளதைக் கண்டு அதிசயித்துப் போயினர். அந்தக் காலணி ஒருவயது குழந்தை முதல் வயசாளி வரை எல்லோருக்கும் பொருந்துவதாக இருந்தது. அதைக் காலில் அணிந்தவுடன் [illegible] காலடியில் பரவுவதுபோலவும், பனியின் மிருது படர்வதுபோலவும் இருப்பதாகப் பலர் கூறினர். அவர், வராது போன, காலணிக்கு உரிய சிறுமியை நினைத்துக் கொண்டார்.

கோடைக்காலம் பிறந்திருந்தது. எண்ணற்ற சிறுமிகளும், பெண்களும், ஆண்களும் அந்த [illegible] அணிந்து பார்த்துப் போயினர். அதை அணிந்து பார்க்க அவர்களே பணம் தரவும் தொடங்கினர். தினசரியாகப் பணம் பெருகிக் கொண்டே போனது. வருடங்கள் புரண்டன. அவர் பசு இரண்டு வாங்கினார். வீடு கட்டிக் கொண்டார். வாழ்வின் நிலை உயர்ந்து கொண்டே போனது. இப்போதும் அந்தச் சிறுமி வரக்கூடும் என்று பலர் முகத்தின் ஊடேயும் அவளைத் தேடிக் கொண்டிருந்தார்.

அவர் வருவதற்கு முன்பாகவே காலையில் பலர் மரத்தடியில் அவருக்காகக் காத்து நிற்பார்கள். அணிந்து பார்ப்பார்கள். முகத்தில் சந்தோஷம் பீறிடும். கலைந்து போவார்கள். இப்படியாக மாரியின் முப்பது வருடம் கடந்தது. அந்த வருடம் மழைக்காலம் உரத்துப் பெய்தது. ஓர் இரவில் காலணியோடு வீடு திரும்பும்போது அதைத் திருட முனைந்த இருவர் தடியால் தாக்க, பலமிழந்து கத்தி வீழ்ந்தார். யாரோ அவரைக் காப்பாற்றினார்கள். காலணி திருடு போகவில்லை. ஆனால், தலையில் பட்ட அடி அவரைப் பலவீனமடையச் செய்தது. வீட்டைவிட்டு வெளியேறி நடக்க முடியாதவராகிப் போனார். அந்தச் சிறுமிக்காக அவர் மனம் காத்துக் கொண்டே இருந்தது. தனது மரணத்தின் முன்பு ஒரு தரம் அவளைச் சந்திக்க முடியாதோ என்ற ஏக்கம் பற்றிக் கொண்டது. தான் அவளால் உயர்வு அடைந்ததற்கான கடனைச் சுமந்தபடி மரிக்க வேண்டும் என்பது வேதனை தருவதாக இருந்தது. பார்வையாளர்கள் அவர் வீடு தேடி வந்து அணிந்து பார்த்துப் போயினர்.

ஒரு மழை இரவில் பார்வையாளர் யாவரும் வந்து போய் முடிந்த பின்பு கதவை மூடி மாரி உள்ளே திரும்பும் போது யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்த படி, "காலையில் வாருங்கள்" எனச் சொன்னார். மத்திய வயதில் ஒரு பெண் நனைந்தபடி நின்றிருந்தாள். அவள் தணிவான குரலில் சொன்னாள், "வெகு தாமதமாகிவிட்டது எனது காலணியைத் தைத்துவிட்டீர்களா இல்லையா?"

அவளை அடையாளம் கண்டுவிட்டார் மாரி. அதே சிறுமி. அந்தப் பெண் தன் கையிலிருந்த கூடையிலிருந்து சிவப்புநிற இடக்கால் காலணியை எடுத்து அவர் முன்னே காட்டிச் சொன்னாள். "இதன் வலது காலணி தைக்கக் கொடுத்தது நினைவிருக்கிறதா?" அவர் தலையாட்டியபடி தன்னிடமிருந்த காலணியை எடுத்து வந்து துடைத்து அவளிடம்

காட்டினார். அவள் கைகளில் தந்தபடி அதன் விந்தையை எடுத்துச் சொன்னார். "இந்தக் காலணி உலகின் எல்லாப் பாதங்களுக்கும் பொருந்துகிறது."

அவள் ஆச்சரியமின்றித் தலையாட்டினாள். தன்னிடம் இருந்த நாணயம் எதையோ அவரிடம் கூலியாகக் கொடுத்துவிட்டுக் கூடையில் அந்தக் காலணியைப் போட்டாள். இந்தச் சொத்து, வாழ்வு யாவும் அவள் தந்ததுதான். அவள் யார் என அறிய ஆவலாகிக் கேட்டார். பதிலற்றுச் சிரித்தபடி மீண்டும் மழையில் வெளியேறிச் சென்றுவிட்டாள். தெருவின் விளக்குக் கம்பம் அருகே வந்து நின்ற அவள் கூடையில் இருந்த இரண்டு காலணிகளையும் எடுத்துத் தரையிலிட்டு காலில் அணிய முயன்றாள். அவள் கொண்டு வந்த இடது காலணி சரியாகப் பொருந்தியது. தைத்து வாங்கின வலது பாதக் காலணியை அணிந்த போது அது பொருந்தவில்லை. சிறியதாக இருந்தது.



**நூல் வெளி**

எஸ்.ராமகிருஷ்ணன் தற்காலத் தமிழ் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைத் தொகுப்புகள், சிறுவர் இலக்கியங்கள் என இவருடைய படைப்புகள் நீள்கின்றன. உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள் முதலிய ஏராளமான நூல்களை எழுதியுள்ளார்.

இக்கதை தாவரங்களின் உரையாடல் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.



## கற்பவை கற்றபின்

1. தனக்குப் பெரும் வருமானத்தைத் தந்த காலணியைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென மாரி நினைத்தது ஏன்? வகுப்பில் கலந்துரையாடுக.
2. மீண்டும் வந்த பெண்ணுக்குக் காலணி பொருந்தாதது ஏன்?

L8CVAB



## மதிப்பீடு

பாதம் கதையைச் சுருக்கி எழுதுக.

சிந்தனை வினா

1. மாரிக்குக் கிடைத்தது போன்ற காலணி உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
2. பாதம் என்னும் கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்ட கருத்து யாது?

கற்கண்டு

இயல்
இரண்டு

# பெயர்ச்சொல்

மரம், பள்ளிக்கூடம், சித்திரை, கிளை, இனிப்பு, பாடுதல் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவை அனைத்தும் பெயரைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவையாவன

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

L9JHUH

### பொருட்பெயர்

பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இஃது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

(எ.கா.) மரம், செடி, மயில், பறவை, புத்தகம், நாற்காலி.

### இடப்பெயர்

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா.) சென்னை, பள்ளி, பூங்கா, தெரு.

### காலப்பெயர்

காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா.) நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு.

### சினைப்பெயர்

பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா.) கண், கை, இலை, கிளை.

### பண்புப்பெயர்

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

(எ.கா.) வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

### தொழிற்பெயர்

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) படித்தல், ஆடுதல், நடித்தல்.

**அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கான சான்றுகளை தொடரில் அமைத்து எழுதுவோம்.**

| | |
|---|---|
| காவியா புத்தகம் படித்தாள் | - பொருட்பெயர் |
| காவியா பள்ளிக்குச் சென்றாள் | - இடப்பெயர் |
| காவியா மாலையில் விளையாடினாள் | - காலப்பெயர் |
| காவியா தலை அசைத்தாள் | - சினைப்பெயர் |
| காவியா இனிமையாகப் பேசுவாள் | - பண்புப்பெயர் |
| காவியாவுக்கு நடனம் ஆடுதல் பிடிக்கும் | - தொழிற்பெயர் |

## இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

நம் முன்னோர் பெயர்ச்சொற்களை அவை வழங்கும் அடிப்படையில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இருவகைப்படுத்தினர்.

### இடுகுறிப்பெயர்

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.

(எ.கா.) மண், மரம், காற்று

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

### இடுகுறிப் பொதுப்பெயர்

ஓர் இடுகுறிப்பெயர் அத்தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் குறிப்பது இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா.) மரம், காடு.

### இடுகுறிச் சிறப்புப்பெயர்

ஓர் இடுகுறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும்.

(எ.கா.) மா, கருவேலங்காடு.

### காரணப்பெயர்

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிப் பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

(எ.கா.) நாற்காலி, கரும்பலகை

இது காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என இரு வகைப்படும்.

### காரணப் பொதுப்பெயர்

காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா.) பறவை, அணி

**காரணச் சிறப்புப்பெயர்**

குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச்சிறப்புப்பெயர் ஆகும்.

(எ.கா.) வளையல், மரங்கொத்தி

## கற்பவை கற்றபின்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதில் இடம் பெற்றுள்ள இடுகுறி, காரணப் பெயர்களை அறிந்து எழுதுக.

நீர் வற்றிப்போன குளத்தில் செந்தாமரை, ஆம்பல், கொட்டி, நெய்தல் முதலான கொடிகளும் வாடியிருந்தன. நீர் நிரம்பி இருந்தவரை ஊர் மக்களும், விலங்குகளும் மரங்கொத்திபோன்ற பறவைகளும் பயன்படுத்தி மகிழ்ந்த குளம் அது. காலை நேரம் சூரியன் காய்ந்து கொண்டிருந்தது. இப்போது அக்குளத்தைக் கண்டு கொள்வார் யாருமில்லை.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.
   அ) பறவை ஆ) மண் இ) முக்காலி ஈ) மரங்கொத்தி
2. காரணப்பெயரை வட்டமிடுக.
   அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை
3. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக.
   அ) வயல் ஆ) வாழை இ) மீன்கொத்தி ஈ) பறவை

குறுவினா

1. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?
3. காரணப்பெயர் என்றால் என்ன?

சிறுவினா

அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

சிந்தனை வினாக்கள்

இடுகுறிப்பெயர், காரணப்பெயர் ஆகியவற்றின் பெயர்க்காரணத்தைக் கூறுக.

## மொழியை ஆள்வோம்!

கேட்க

தத்துவப் பாடல் ஒன்றைக் கேட்டு மகிழ்க.

பேசுக

உங்கள் பகுதிகளில் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் குறித்துப் பேசுக.

படித்து மகிழ்க

*அன்பினில் இன்பம் காண்போம்;*
*அறத்தினில் நேர்மை காண்போம்;*
*துன்புறும் உயிர்கள் கண்டால்;*
*துரிசறு கனிவு காண்போம்;*
*வன்புகழ் கொடையிற் காண்போம்;*
*வலிமையைப் போரில் காண்போம்;*
*தன்பிறப் புரிமை யாகத்*
*தமிழ்மொழி போற்றக் காண்போம்.*

– புலவர் அ.முத்தரையனார், மலேசியக் கவிஞர்.

குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுக.

நாய்க்குட்டி - குழிக்குள் – கத்தும் சத்தம் – முகிலன் – முதலுதவி – பால் – தூங்கியது – வாலாட்டியது.

அகராதியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

1. கருணை 2. அச்சம் 3. ஆசை

கீழ்க்காணும் பெயர்ச் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

பூனை, தையல், தேனி, ஓணான், மான், வௌவால், கிளி, மாணவன்,
மனிதன், ஆசிரியர், பழம்

பின்வரும் வாக்கியங்களில் உள்ள அறுவகைப் பெயர்களை எடுத்து எழுதுக.

1. கைகள் இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதினர்.
2. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூலின் பயனாகும்.
3. அறிஞர்களுக்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
4. நீதிநூல் பயில் என்கிறார் பாரதியார்.
5. மாலை முழுதும் விளையாட்டு.
6. அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்.

பின்வரும் பாடலைப் படித்து, அடிக்கோடிட்ட சொல் எவ்வகைப் பெயர் என்பதை எழுதுக.

விடியலில் துயில் எழுந்தேன் - ____________
இறைவனைக் கை தொழுதேன் - ____________
புகழ்பூத்த மதுரைக்குச் சென்றேன் - ____________
புத்தகம் வாங்கி வந்தேன் - ____________
கற்றலைத் தொடர்வோம் இனி - ____________
நன்மைகள் பெருகும் நனி - ____________

## மொழியோடு விளையாடு

கட்டங்களில் உள்ள வார்த்தைகளைக் கொண்டு தொடர்களை அமைக்க.

| | | |
|---|---|---|
| வெல்லும் | கேளிர் | தீதும் |
| வாரா | நன்றும் | யாவரும் |
| யாதும் ஊரே | பிறர்தர | வாய்மையே |

சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துங்கள்

1. சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.
2. மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.
3. சிறைச் சாலைக்குச் சென்று உணவிட்டாள்.
4. அமுதசுரபியைப் பெற்றாள்.
5. ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்.

ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. அரம் – அறம்

--------------------------------------------------

--------------------------------------------------

2. மனம் – மணம்

--------------------------------------------------

--------------------------------------------------

இருபொருள் தருக.

(எ.கா) ஆறு

ஆறு - நதி
ஆறு - எண்

1. திங்கள் 2. ஓடு 3. நகை

### புதிர்ச் சொல் கண்டுபிடி

1. இச்சொல் மூன்றெழுத்துச் சொல். உயிர் எழுத்துகள் வரிசையில் முதல் எழுத்து இச்சொல்லின் முதல் எழுத்து. வல்லின மெய் எழுத்துகளின் வரிசையில் கடைசி எழுத்து இச்சொல்லின் இரண்டாம் எழுத்து. வாசனை என்னும் பொருள்தரும் வேறு சொல்லின் கடைசி எழுத்து இச்சொல்லின் மூன்றாம் எழுத்து. அஃது என்ன?

### கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | |
|---|---|
| மாலையில் | கற்போம் |
| பிறருக்கு உதவி | எழுவோம் |
| பெரியோரை | விளையாடுவோம் |
| நூல் பல | செய்வோம் |
| உடற்பயிற்சி | புரிவோம் |
| அதிகாலையில் | வணங்குவோம் |

### செயல்திட்டம்

1. நீங்கள் சேவை செய்ய விரும்பும் பணிகளைப் பட்டியலிடுக.
2. உயர்ந்த குறிக்கோளை அடைந்து வெற்றி பெற்ற சாதனையாளர்கள் தொகுப்பு ஒன்றைத் தயாரிக்க.

## நிற்க அதற்குத் தக...

### என் பொறுப்புகள்

- உணவை வீணாக்க மாட்டேன்.
- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.
- பயணம் செய்யும் போது தேவைப்படுவோருக்கு எழுந்து இடம் தருவேன்.
- எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவேன்.

### கலைச்சொல் அறிவோம்

1. அறக்கட்டளை - *Trust*
2. தன்னார்வலர் - *Volunteer*
3. இளம் செஞ்சிலுவைச் சங்கம் - *Junior Red Cross*
4. சாரண சாரணியர் - *Scouts & Guides*
5. சமூகப் பணியாளர் - *Social Worker*

## இணையத்தில் காண்க

பொதுத்தொண்டு செய்யும் நிறுவனங்களின் பெயர்களை இணையத்தில் கண்டு திரட்டுக.

வாழ்வியல்

இயல் இரண்டு

# திருக்குறள்

LA3EXX

### அறன் வலியுறுத்தல்

1. *மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
   *ஆகுல நீர பிற.**

உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.

2. *அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
   *இழுக்கா இயன்றது அறம்.*

பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

### ஈகை

3. *வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்*
   *குறியெதிர்ப்பை நீரது உடைத்து.*

இல்லாதவர்க்கு தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும்.

4. *ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
   *வைத்திழக்கும் வன்க ணவர்.*

இல்லாதவர்க்குத் தருவதால் உண்டாகும் இன்பத்தை அறியாதவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

### இன்னா செய்யாமை

5. *இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
   *நன்னயம் செய்து விடல்.**

நமக்குத் துன்பம் செய்தவர் நாணும்படி அவருக்கு நன்மை செய்வதுதான் அவரைத் தண்டிக்கும் வழியாகும்.

6. *அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்*
   *தந்நோய்போல் போற்றாக் கடை.*

பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதாவிட்டால் தாம் பெற்றுள்ள அறிவால் எந்தப் பயனும் இல்லை.

7. *எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
   *மாணாசெய் யாமை தலை.*

நம் உள்ளம் ஏற்றுக் கொள்ளாத எச்செயலையும் எக்காலத்திலும் யார்க்கும் சிறிதளவுகூடச் செய்யக் கூடாது.

### கொல்லாமை

*8. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**

தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். அதுவே அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது.

### பெரியாரைப் பிழையாமை

*9. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
*போற்றலுள் எல்லாம் தலை*

ஆற்றல் உடையவர்களை இகழக் கூடாது. அதுவே தம்மைத் தீங்கிலிருந்து காத்துக்கொள்ளும் வழிகளுள் சிறந்த வழியாகும்.

*10.எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
*பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.*

தீயினால் சுடப்பட்டவர்கூடப் பிழைத்துக்கொள்ள முடியும். ஆனால் பெரியவர்களுக்குத் தீங்கு செய்தவர் தப்ப முடியாது.

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே ………………… ஆகும்.
   அ) பகை ஆ) ஈகை இ) வறுமை ஈ) கொடுமை
2. பிற உயிர்களின் ........................க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.
   அ) மகிழ்வை ஆ) செல்வத்தை இ) துன்பத்தை ஈ) பகையை
3. உள்ளத்தில் .................... இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
   அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு ஈ) குற்றம்

### இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

*வறியார்க்கொன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்*
*குறியெதிர்ப்பை உடைத்து நீரது.*

*எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்*
*மாணாசெய் தலை யாமை.*

### குறுவினா

1. அறிவின் பயன் யாது?
2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?


பின்வரும் நிகழ்வைப் படித்து அதற்குப் பொருத்தமான திருக்குறள் எதுவெனக் காண்க.

நிறைமதி அவளுடைய தோழிகளுடன் பூங்காவிற்குச் சென்றாள். அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாள். நண்பகல் நேரத்தில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து தான் கொண்டு வந்திருந்த உணவைத் தோழிகளுடன் பகிர்ந்து உண்டாள். அவர்களின் அருகே பறவைகள் பறந்து வந்தன. தன்னிடம் இருந்த உணவைப் பறவைகளுக்கும் அளித்தாள்.

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற.
2. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
   மாணாசெய் யாமை தலை.
3. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
   தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

## இணையச் செயல்பாடுகள்







படிகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தித் திருக்குறள் என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

⇒ செயலியின் முதல் பக்கத்தில் ஆரம்பிக்க, தொடர்க, வகைப்பாட்டியல் போன்ற தெரிவுகள் தோன்றும். இதன் வழியே விரும்பும் திருக்குறளை அறிக.

⇒ மேலும் குறள் விளையாட்டு என்பதைத் தெரிவு செய்து மாறி இருக்கும் சீர்களை வரிசைப்படுத்தித் திருக்குறளை விளையாட்டின் மூலம் அறிக.





செயல்பாட்டிற்கான உரலி

*https://play.google.com/store/apps/details?id=com.EL4.KuralGame&hl=en*

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

இயல் மூன்று

# இன்னுயிர் காப்போம்



## கற்றல் நோக்கங்கள்


- பிற உயிர்களைத் தம் உயிர் போல் மதித்தல்
- பிற உயிர்களுக்குத் துன்பம் தராமல் இருத்தல்
- உதவி செய்யும் பண்பைப் பெறுதல்
- உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை அறிதல்
- இயல்பு நவிற்சி, உயர்வு நவிற்சி அணிகளை இனம் காணுதல்

இயல் மூன்று

கவிதைப்பேழை

# ஆசியஜோதி

LAL728




இரக்கம் என்பது தலைசிறந்த பண்பு. மனிதரிடம் மட்டுமன்று, மற்ற எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ள வேண்டும். பிற உயிர்களைத் தம்உயிர் போல் எண்ணிக் காக்க வேண்டும். அதுவே சான்றோர் போற்றும் உயிர் இரக்கம் ஆகும். அவ்விரக்கமே மனித குலத்தை வாழ வைக்கிறது. உலக உயிர்கள் எல்லாம் துன்பம் இன்றி இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்பியவர் புத்தர். அவரின் அறவுரையை அறிவோம் வாருங்கள்.

### முன்கதைச் சுருக்கம்

அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டு வந்தவர் புத்தர்பிரான். பிம்பிசார மன்னனின் யாகத்துக்காக ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன. அவற்றின் நடுவில் அடிபட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டியைப் புத்தர் தம் தோளில் சுமந்து சென்றார். யாகசாலையை அடைந்தார். மன்னனுக்கு அறவுரை கூறினார். நாடெங்கும் உயிர்க்கொலையைத் தடுத்து நிறுத்தினார்.

*நின்றவர் கண்டு நடுங்கினாரே – ஐயன்*
*நேரிலே நிற்கவும் அஞ்சினாரே;*
*துன்று கருணை நிறைந்த வள்ளல் – அங்கு*
*சொன்ன மொழிகளைக் கேளும் ஐயா!*

*வாழும் உயிரை வாங்கிவிடல் – இந்த*
*மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;*
*வீழும் உடலை எழுப்புதலோ – ஒரு*
*வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா!*

*யாரும் விரும்புவது இன்னுயிராம் – அவர்*
*என்றுமே காப்பதும் அன்னதேயாம்;*
*பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப் – படும்*
*பாடு முழுதும் அறிந்திலீரோ?*



*நேரிய உள்ளம் இரங்கிடுமேல் – இந்த*
*நீள்நிலம் முற்றுமே ஆண்டிடலாம்;*
*பாரினில் மாரி பொழிந்திடவே – வயல்*
*பக்குவ மாவது அறிந்திலீரோ?*

*காட்டும் கருணை உடையவரே – என்றும்*
*கண்ணிய வாழ்வை உடையவராம்;*
*வாட்டும் உலகில் வருந்திடுவார்– இந்த*
*மர்மம் அறியாத மூடரையா!*

*காடு மலையெலாம் மேய்ந்துவந்து – ஆடுதன்*
*கன்று வருந்திடப் பாலையெல்லாம்*
*தேடிஉம் மக்களை ஊட்டுவதும் – ஒரு*
*தீய செயலென எண்ணினீரோ?*

*அம்புவி மீதில்இவ் ஆடுகளும் – உம்மை*
*அண்டிப் பிழைக்கும் உயிரலவோ?*
*நம்பி இருப்பவர் கும்பி எரிந்திடில்*
*நன்மை உமக்கு வருமோ ஐயா?*

*ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம் – ஏழை*
*ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ?*
*தீயவும் நல்லவும் செய்தவரை – விட்டுச்*
*செல்வது ஒருநாளும் இல்லைஐயா!*

*ஆதலால் தீவினை செய்யவேண்டா – ஏழை*
*ஆட்டின் உயிரையும் வாங்கவேண்டா;*
*பூதலந் தன்னை நரகம்அது ஆக்கிடும்*
*புத்தியை விட்டுப் பிழையும்ஐயா!*

*– கவிமணி தேசிக விநாயகனார்*

**சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அஞ்சினர் | – | பயந்தனர் | நீள்நிலம் | – | பரந்த உலகம் |
| கருணை | – | இரக்கம் | முற்றும் | – | முழுவதும் |
| வீழும் | – | விழும் | மாரி | - | மழை |
| ஆகாது | - | முடியாது | கும்பி | – | வயிறு |
| பார் | – | உலகம் | பூதலம் | – | பூமி |

## பாடலின் பொருள்

*யாகசாலையில் நின்றவர் அனைவரும் புத்தர்பிரானைக் கண்டு நடுங்கினர். அவர் முன்னால் நிற்கவும் அஞ்சினர். கூடி இருந்த மக்களின் முன்னால் இரக்கமே உருவான புத்தர்பிரான் கூறிய உரையைக் கேளுங்கள்.*

*வாழ்கின்ற உயிர்களை அழிப்பது இந்த உலகத்தில் எல்லார்க்கும் எளிய செயல். ஆனால், இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.*

*எல்லாரும் தம் உயிரைப் பெரிதாக மதித்துப் பாதுகாக்கின்றனர். எறும்பு கூடத் தன் உயிரைக் காத்துக் கொள்ளப் பாடுபடுவதை அறியாதவர் உண்டோ?*

*நேர்மையான இரக்க மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையையும் ஆட்சி செய்ய முடியும். உலகில் மழை பெய்வதால் வயல் பக்குவம் அடைவதை அறியாதவர் உண்டோ?*

*எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர். இந்த மறைபொருளை அறியாதவர் பிற உயிர்களை வருத்தித் தாமும் துன்புறுவர்.*


*காடுமலை எல்லாம் மேய்ந்து வருகிறது ஆடு. அது தன் குட்டி வருந்திடும் வகையில் பாலை எல்லாம் மக்களுக்குத் தருகிறது. இதனைத் தீயசெயல் என்று நீங்கள் கருதுகிறீர்களா?*

*இந்த உலகில் ஆடுகளும் உங்களை நம்பி இருக்கும் உயிர்கள் அன்றோ? நம்மை நம்பி இருப்பவரின் வயிறு எரியும்வகையில் நடந்து கொள்வதால் உங்களுக்கு நன்மை கிடைக்குமா?*

*ஆயிரம் பாவங்கள் செய்துவிட்டு, ஆட்டின் உயிரை எடுப்பதால் பாவங்கள் நீங்கி விடுமா? ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.*

*ஆகையால், தீய செயல்களைச் செய்யாதீர்கள். பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்யாதீர்கள். இந்தப் பூமியை மகிழ்ச்சியற்றதாக மாற்றிடும் எண்ணத்தை உங்களைவிட்டு நீக்குங்கள். இங்கு மக்களோடு சேர்ந்து மற்ற உயிர்களும் மகிழ்வோடு வாழ வழி செய்யுங்கள்.*

### நூல் வெளி



தேசிக விநாயகனார் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர். முப்பத்தாறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.

ஆசிய ஜோதி, ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய லைட் ஆஃப் ஆசியா (Light of Asia) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது. இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.

## கற்பவை கற்றபின்

1. நீங்கள் மிகவும் விரும்பும் தாவரங்கள், பறவைகள், விலங்குகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. உங்களைப்போல் பிறரையும் நேசியுங்கள் – என்னும் தலைப்பில் பேசுக.

## மதிப்பீடு

LAV33V

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்
   அ) ஜீவ ஜோதி ஆ) ஆசிய ஜோதி இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி
2. நேர்மையான வாழ்வை வாழ்பவர்
   அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர் ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்
   இ) தம்மை மட்டும் காத்துக்கொள்பவர் ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்
3. ஒருவர் செய்யக் கூடாதது
   அ) நல்வினை ஆ) தீவினை இ) பிறவினை ஈ) தன்வினை
4. எளிதாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும் இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்
5. பாலையெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) பாலை+யெல்லாம் ஆ) பாலை+எல்லாம் இ) பாலை+எலாம் ஈ) பா+எல்லாம்
6. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) இன்உயிர் ஆ) இனியஉயிர் இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர்
7. மலை+எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) மலைஎலாம் ஆ) மலையெலாம் இ) மலையெல்லாம் ஈ) மலைஎல்லாம்

**குறுவினா**

1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?
2. எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?
3. ஒருநாளும் விட்டுச் செல்லாதது எது?
4. உலகம் முழுமையையும் எப்போது ஆளமுடியும்?

**சிறுவினா**

எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?


**சிந்தனை வினா**

பறவைகளும், விலங்குகளும் சுதந்திரமாக வாழ வேண்டும் எனில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

உரைநடை உலகம்

**இயல் மூன்று**

# மனிதநேயம்




இல்லாதவர்க்குக் கொடுத்து மகிழ்வதே ஈகை. பசி என்று வந்தவர்க்கு வயிறார உணவிட வேண்டும். தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்ய வேண்டும். ஆதரவு இல்லாதவர்களை அன்புடன் அரவணைக்க வேண்டும். பிறர் துன்பத்தைத் தமது துன்பமாக நினைத்து வருந்தும் பண்பினைக் கொள்ள வேண்டும். இப்பண்புகளைக் கொண்டு வாழ்வோர் உயர்வு அடைவர். அப்படி வாழ்ந்தோரின் வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளைக் காண்போம் வாருங்கள்.

உலகில் எந்த ஆறும் தனது தாகத்திற்காக ஓடுவதில்லை. எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை. எந்த மரமும் தனக்காகக் கனிகளை உருவாக்குவதில்லை. இவற்றைப் போல மனிதனும் தனக்கென வாழாமல், பிறர்க்கென வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்குக் அருள், பொறுமை, பரிவு, நன்றி உணர்வு, இன்சொல் பேசுதல் போன்றவை தேவை. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே மனிதநேயம் ஆகும். மனிதநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை,

*தமக்கென முயலா நோன்றாள் – பிறர்க்கென*
*முயலுநர் உண்மையானே (புறம் – 182)*

என்னும் புறநானூற்று அடிகள் உணர்த்துகின்றன.

LB4Y5I

### வள்ளலார்

வள்ளலார் வாழ்வில் நடந்ததாக ஒரு நிகழ்வைப் பலரும் கூறுவதுண்டு. வள்ளலார் தம் இளம் வயதில் ஒருநாள் நடந்து வந்து கொண்டிருந்தார். நீண்ட தூரம் நடந்ததால் களைப்பு ஏற்பட்டது. எனவே ஓய்வெடுக்க விரும்பினார். வழியில் சத்திரம் ஒன்று இருந்தது. அதன் திண்ணையில் படுத்து உறங்கினார். அப்போது ஒருவன் அங்கு வந்தான். படுத்திருந்த வள்ளலாரின் காதில் கடுக்கன் இருப்பதைக் கண்டான். அதனைத் தனதாக்கிக் கொள்ள முடிவெடுத்தான். தங்கக்கடுக்கனை மெதுவாகக் கழற்றினான். அவனது செயலை



அறிந்தும் வள்ளலார் கண் மூடியபடியே படுத்திருந்தார். ஒரு கடுக்கனைக் கழற்றியவுடன், மறுகாதில் உள்ள கடுக்கனை அவன் கழற்றுவதற்கு ஏதுவாகத் திரும்பிப் படுத்தார். அவன் அதையும் கழற்றிக் கொண்டு, அந்த இடத்தைவிட்டு அகன்று செல்ல முற்பட்டான். அப்போது வள்ளலார் மென்மையான குரலில், "அப்பா, இவை இரண்டும் தங்கக்கடுக்கன்கள். குறைந்த விலைக்கு விற்றுவிடாதே! மேலும், ஒரு கடுக்கனுடன் சென்றால் உன்னைத் திருடன் என எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். எனவேதான் இரண்டு கடுக்கன்களையும் நீ எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாகத் திரும்பிப் படுத்தேன்" என்றார். வள்ளலார் கூறியதைக் கேட்ட அவன் வெட்கித் தலைகுனிந்தான். இவ்வாறு தம்பொருளைக் கவர்ந்தவரிடம் கூட அன்பு காட்டியவர் வள்ளலார்.

**தெரிந்து தெளிவோம்**

*"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"*

*– வள்ளலார்*

வள்ளலார் மக்களின் பசிப்பிணியைக் கண்டு உள்ளம் வாடினார். அதனை நீக்க விரும்பினார். தம் பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார். பசித்தோருக்கு உணவு வழங்கும் வள்ளலாரின் மனிதநேயச் செயல் வடலூரில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### அன்னை தெரசா

ஒரு நாள் அன்னை தெரசா சாலையின் ஓரமாக நடந்து சென்றார். அப்போது வழியில் மூதாட்டி ஒருவர் சாலையின் ஓரம் படுத்திருந்தார். அவர் முகத்தைத் துணியால் மூடி இருந்தார். ஒரு கையால் பூனைக் குட்டியை அணைத்துக் கொண்டு இருந்தார். அன்னை தெரசா அவரின் அருகில் சென்று உற்றுநோக்கினார். தொழுநோயின் கடுமையால் உண்டான வேதனை மூதாட்டியின் முகத்தில் தெரிந்தது. கைகளில் விரல்கள் இல்லை. அன்னை தெரசா மனம் கலங்கினார். மூதாட்டியின் அருகில் சென்று அவரைத் தொட்டுத் தூக்கினார். "சாலை ஓரத்தில் படுத்து இருப்பது ஏன்?" எனக்கேட்டார்.



"என்னைத் தொடாதீர்கள். என் நோய் உங்களுக்கும் தொற்றிக்கொள்ளும். என் உறவினர்களே என்னை வெறுத்து விலக்கி விட்டனர். என்னுடன் பேசுவதில்லை. என்னைக் கண்டாலே விலகி ஓடுகின்றனர். இந்தப் பூனை மட்டுமே என்னுடன் இருக்கிறது" என அழுதார் மூதாட்டி.

இதைக் கேட்ட அன்னை தெரசா கண்ணீர் விட்டார். இவரைப் போல ஆயிரக்கணக்கான நோயாளிகள் உதவி செய்ய யாருமின்றி வாடுவதைக் கண்டார். அக்காலத்தில் தொழுநோய் கடுமையான தொற்றுநோயாகக் கருதப்பட்டது. கருணை உள்ளம் கொண்ட அன்னை தெரசா அவர்களுக்குத் தொண்டு செய்ய முடிவெடுத்தார். தமது இறுதிக் காலம் வரை பிறருக்காகவே வாழ்ந்தார்.


மக்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணி என்று வாழ்ந்தார். அதனால் அமைதிக்கான நோபல் பரிசு அவரைத் தேடி வந்தது.

**தெரிந்து தெளிவோம்**

*வாழ்க்கை என்பது*
*நீ சாகும் வரை அல்ல*
*மற்றவர் மனதில்*
*நீ வாழும் வரை*
*– அன்னை தெரசா*

## கைலாஷ் சத்யார்த்தி

அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சத்யார்த்தி. இவர் சிறு வயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் பொழுது சாலையோரத்தில் ஒரு சிறுவனைக் காண்பார். அவன் தன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பான். ஏன் அந்தச் சிறுவன் தன்னைப் போல் பள்ளிக்கு வரவில்லை என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. தம் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இக்கேள்வியைக் கேட்டார். "பணம் இல்லாததால் அச்சிறுவன் பள்ளிக்கு வரவில்லை. வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யப் பணம் வேண்டும். எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான்" என்ற பதில் கிடைத்தது. அந்தப் பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.



அவருடைய மனித நேயம் பிற்காலத்தில் அவரைப் பள்ளி செல்லாத குழந்தைகள் மேல் பரிவு கொள்ள வைத்தது. அதற்காக அவர் குழந்தைகளைப் பாதுகாப்போம் என்னும் இயக்கத்தைத் தொடங்கினார். அந்த இயக்கத்தின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கப் பாடுபட்டு வருகிறார். கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்து ஆறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார். உலகக் குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார். குழந்தைகளின் கல்வி மற்றும் உரிமைக்காக நாடு கடந்து பரப்புரை ஆற்றி வருகிறார்.

**தெரிந்து தெளிவோம்**

குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது.
– கைலாஷ் சத்யார்த்தி

இவரைப் போல் மனிதநேயம் மிக்க பலர் உள்ளனர். அமைப்பாக உதவுவது மட்டுமன்று; சூழலுக்கேற்ப மனிதநேயம் கொள்ளும் இவர்களைப் போல நாமும் மனிதநேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். நமக்குள் இருக்கும் மனிதநேயத்தை மலரச் செய்ய வேண்டும்.

எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே மனித நேயமும் இருக்கும்.

## கற்பவை கற்றபின்

1. நாளிதழ்களில் வந்துள்ள மனிதநேயம் பற்றிய செய்திகளைச் சேகரித்துக் கூறுக.
2. எவரேனும் ஒருவருக்கு நீங்கள் உதவி செய்த அனுபவத்தைக் கூறுக.
3. ஒற்றுமையாக வாழும் பண்பே சிறந்தது என்பது பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

LBDU76

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்
   அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை இ) மனித நேயம் ஈ) மனித உடைமை
2. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் ---------- காட்டியவர் வள்ளலார்.
   அ) கோபம் ஆ) வெறுப்பு இ) கவலை ஈ) அன்பு
3. அன்னை தெரசாவிற்கு ---------- க்கான 'நோபல் பரிசு' கிடைத்தது
   அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி
4. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம்
   அ) குழந்தைகளைப் பாதுகாப்போம் ஆ) குழந்தைகளை நேசிப்போம்
   இ) குழந்தைகளை வளர்ப்போம் ஈ) குழந்தைகள் உதவி மையம்

**பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. | வள்ளலார் | - | நோயாளிகளிடம் அன்பு காட்டியவர் |
| 2. | கைலாஷ் சத்யார்த்தி | - | பசிப்பிணி போக்கியவர் |
| 3. | அன்னை தெரசா | - | குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர் |

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. மனிதநேயம் 2. உரிமை 3. அமைதி 4. அன்புசெய்தல்

**குறுவினா**

1. யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?
2. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?
3. அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் யாது?

**சிறுவினா**

கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?


**சிந்தனை வினா**

அன்னை தெரசாவின் மனிதநேயம் பற்றிய வேறு ஒரு நிகழ்வினை அறிந்து எழுதுக.

விரிவானம்

இயல் மூன்று

# முடிவில் ஒரு தொடக்கம்




பொன்னையும் பொருளையும் வாரி வழங்குவது மட்டும் வள்ளல் தன்மை அன்று. நமது இறப்பிற்குப் பின் மண்ணுக்குச் செல்லும் உடல் உறுப்புகளைப் பிறர் வாழ வழங்குவதும் வள்ளல் தன்மையே. உறுப்புத்தானம் செய்வோம். மண்ணில் ஒருவரையாவது வாழ வைப்போம். இன்றே இந்தச் சூளுரை ஏற்போம். உறுப்புத்தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய நிகழ்வை அறிவோம் வாருங்கள்.

**பெங்களூரு**

*மாலை நேரம்*

"அம்மா... என் தோழிகள் வந்து இருக்கிறார்கள். எங்களுடன் விளையாட வரமாட்டாயா என்று கேட்கிறார்கள். அவர்களுடன் நான் விளையாடப் போகட்டுமா? "

அம்மாவும் அப்பாவும் கண்கலங்குகின்றனர்.

"உன் உடல் நிலை சரியாகட்டும் கண்ணு. நீ சீக்கிரமே விளையாடப் போகலாம். சரியா?"

"சரிம்மா, எனக்கும் அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆசைதான். ஆனால் முன்பு போல் என்னால் ஓடியாட முடியவில்லை. மூச்சு விடவும் சிரமமாக உள்ளது" என்று தாயிடம் சொல்லிவிட்டு, பிறகு தோழிகளை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள்.

LBHQ8T

**திருக்கழுக்குன்றம்**

*மாலை நேரம்*

"அம்மா என் நண்பர்கள் விளையாட அழைக்கிறார்கள். நான் விளையாடப் போகட்டுமா?" என்றான். "விளையாடிட்டுச் சீக்கிரமாக வந்துவிட வேண்டும்" என்று கூறிய அம்மாவிடம் "சரிம்மா" என்று கூறி நண்பர்களுடன் விளையாடத் தனது இரு சக்கர வாகனத்தில் வெளியே சென்றான்.

நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினான். நேரம் போனதே தெரியவில்லை. வீட்டிற்குப் புறப்பட்டான். நண்பர்களோடு விளையாடியதை மகிழ்வுடன் அசைபோட்டுக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான். நேரமாகிவிட்டதே; பெற்றோர் கவலைப்படுவார்களே என்னும் சிந்தனையுடன் வாகனத்தை ஓட்டினான்.

**பெங்களூரு**

"உங்கள் மகளின் இதயம் நாளுக்கு நாள் வலுவிழந்து கொண்டே வருகிறது. இதயமாற்று அறுவைசிகிச்சை ஒன்றுதான் கடைசி நம்பிக்கை. அதற்கு முயற்சி செய்யுங்கள்" என்று மருத்துவர் கூறியது நினைவிற்கு வந்தது. எந்த வழியிலாவது தம் மகளின் இதயம் சரியாகிவிடாதா என்ற ஏக்கத்துடன், படுக்கையில் இருக்கும் தம் ஆசை மகளின் நிலை கண்டு பெற்றோர் உள்ளம் பதைத்தனர். கவலையுடன் மகளின் படுக்கையருகே அமர்ந்தனர்.

கவலையோடு மகளின் படுக்கை அருகில் அமர்ந்திருந்த பெற்றோர் தம்மை அறியாமல் உறங்கி விட்டனர். திடீரெனக் கண்விழித்தனர். தங்கள் மகள் அசைவற்றுக் கிடப்பதைக் கண்டு அதிர்ந்தனர். அவளுடைய இதயத்துடிப்பு குறைந்து கொண்டே வந்தது.

**திருக்கழுக்குன்றம்**

முன்னால் ஒரு சரக்குந்து சென்றுகொண்டு இருந்தது. அதில் இருந்த கம்பிகள் வெளியே நீட்டிக் கொண்டு இருந்தன. அந்தக் கம்பியால் தடுக்கப்பட்டு, தடுமாறிக் கீழே விழுந்தான் அவன். தலையில் கடுமையாக அடிபட்டது. என்ன நடக்கிறது என்பதை உணரும் முன்பே மயக்கம் அடைந்தான். அவனது இதயம் மட்டுமே துடித்துக் கொண்டிருந்தது. வேறெந்த அசைவுமில்லை. சீராட்டிப் பாராட்டி வளர்த்த அன்பு மகனின் நிலைகண்டு பெற்றோர் கதறித் துடித்தனர். செய்வதறியாது தவித்தனர்.

மருத்துவர்: என்ன செய்வதென்றே தெரியவில்லை. நீங்கள் இருவருமே மருத்துவர்கள். நிலைமையைப் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கிறேன்! தலையில் கடுமையாக அடிபட்டிருக்கிறது. மூளை செயலிழந்து விட்டது. தீவிர சிகிச்சை அளித்தாலும் மூளை மீண்டும் செயல்படும் என்று சொல்ல முடியாது. இதயம் மட்டுமே இயங்குகிறது.

**பெங்களூரு**

பெற்றோர் : எதுவும் சொல்ல மறுக்கிறீர்களே! ஏதாவது சொல்லுங்கள் டாக்டர். எங்கள் மகள் பிழைக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

மருத்துவர் : நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்களே? உங்கள் மகளுக்கு உடனடியாக இதயமாற்று அறுவைசிகிச்சை செய்ய வேண்டும். இல்லை என்றால் உங்கள் மகளைக் காப்பாற்ற முடியாது.

**திருக்கழுக்குன்றம்**

"டாக்டர்! எங்கள் மகனின் நிலைமை எங்களுக்குப் புரிகிறது. அவனைச் சாகவிட மாட்டோம். எங்கள் இதயம் போன்ற அவனை இழக்க விரும்பவில்லை. நாங்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டோம்!"

**பெங்களூரு**

"டாக்டர்! எங்கள் மகளின் நிலைமை எங்களுக்குப் புரிகிறது. அவளைச் சாகவிட விரும்பவில்லை. எங்கள் இதயம் போன்ற அவளை இழக்க மாட்டோம். நாங்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டோம். எங்கள் இதயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் மகளைக் காப்பாற்றுங்கள்! இனியும் காலம் தாழ்த்த வேண்டாம்! எங்கள் மகளுக்கு வாழ்வு கொடுங்கள்"

**திருக்கழுக்குன்றம்**

*எங்கள் மகனின் இதயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் இதயத்தை எடுத்துத் தேவைப்படும் யாருக்காவது பொருத்த நாங்கள் சம்மதிக்கிறோம். தயவுசெய்து உடனே செயலாற்றுங்கள். எங்கள் மகனுக்கு வாழ்வு கொடுங்கள். அவனைச் சாகவிட மாட்டோம். இவன் வாழ்க்கையை நிறைவானதாக ஆக்குங்கள்.*

*கதறலுடன் மயங்கி விழுந்தனர் பெற்றோர்.*

*மருத்துவக்குழுவினர் விரைவாகச் செயல்பட்டனர். அந்த இளைஞனின் இதயத்தைச் சிறுமிக்குப் பொருத்தினர். இதயம் இடம் மாறி நிலைத்தது; துடித்தது.*

*உறுப்புதானத்தின் உயர்வினை அன்றுதான் உலகமே அறிந்தது; வியந்தது!*

*மனித நேயத்தின் மகத்தான சாதனையாகத் தம் மகனின் துடிக்கும் இதயத்தையே கொடையாகத் தந்த இக்கால வள்ளல்கள் தாம் அசோகன் – புஷ்பாஞ்சலி என்ற மருத்துவத் தம்பதியினர். சிறுமிக்குப் பொருத்தப்பட்ட இதயத்திற்குரிய அந்த இளைஞனின் பெயர் ஹிதேந்திரன். பிறந்த போது பெற்றோரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதால் ஹிதேந்திரன் என்று பெயரிடப்பட்டான். அவன் இறந்த போது உலகத்தார் இதயங்களை எல்லாம் கொள்ளை கொண்டான். இதயம் கொடுத்து இதயங்களை வென்ற ஹிதேந்திரனை இவ்வுலகம் என்றென்றும் நினைவில் கொள்ளும்.*



## கற்பவை கற்றபின்

1. "முடிவில் ஒரு தொடக்கம்" உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் பகிர்க.
2. முதலுதவி பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவற்றுள் சிலவற்றையேனும் அறிந்து கொள்க.

## மதிப்பீடு

LC6HC4

### சிறுவினா

1. "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்துக் கூறுக.
2. இக்கதைக்குப் பொருத்தமாக மற்றொரு தலைப்பு இடுக.

### சிந்தனை வினா

ஹிதேந்திரனின் உண்மைக் கதையைப் படித்தபின் நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழி யாது?

கற்கண்டு

இயல் மூன்று

# அணி இலக்கணம்

LC6HC4

எதிலும் அழகைக் காண விரும்புவது மனிதர்களின் இயல்பு. நாம் நம்மை அணிகலன்களால் அழகுபடுத்திக் கொள்கிறோம். அதுபோல் கவிஞர்கள் தங்கள் கற்பனைத் திறத்தாலும் புலமையாலும் தாங்கள் இயற்றும் பாடல்களில் அழகைச் சேர்க்கின்றனர். இதனை விளக்குவது அணி இலக்கணம் ஆகும். அணி என்பதற்கு அழகு என்பது பொருள்.

கவிஞர் தமது கருத்தைச் சுவையோடு சொல்வதற்கு உதவுவது அணி. மருந்தைத் தேனில் கலந்து கொடுப்பது போல் கருத்துகளைச் சுவைபடக் கூறுவது அணியாகும்.

## இயல்பு நவிற்சி அணி

ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர்.

(எ. கா.)



*தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே*
*துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி*
*அம்மா என்குது வெள்ளைப்பசு – உடன்*
*அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி*
*நாவால் நக்குது வெள்ளைப்பசு – பாலை*
*நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி*

*– கவிமணி தேசிக விநாயகனார்*

இப்பாடலில் கவிஞர் பசுவும் கன்றும் ஒன்றுடன் ஒன்று கொஞ்சி விளையாடுவதை இயல்பாக எடுத்துக் கூறியுள்ளார். எனவே இது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

## உயர்வு நவிற்சி அணி

ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

(எ. கா.)

குளிர்நீரில் குளித்தால்
கூதல் அடிக்குமென்று
வெந்நீரில் குளித்தால்
மேலே கருக்குமென்று
ஆகாச கங்கை
அனல் உறைக்குமென்று
பாதாள கங்கையைப்
பாடி அழைத்தார் உன் தாத்தா

என்று ஒரு தாய் தாலாட்டுப் பாடுகிறாள். இதில் உயர்வு நவிற்சி அணி அமைந்துள்ளது.

## கற்பவை கற்றபின்

*பின்வரும் பாடலைப் படித்து இதில் அமைந்துள்ள அணியைக் குறிப்பிடுக.*

ஆறு சக்கரம் நூறு வண்டி
அழகான ரயிலு வண்டி
மாடு கன்னு இல்லாமத்தான்
மாயமாத்தான் ஓடுது
உப்புப் பாரம் ஏத்தும் வண்டி
உப்பிலிப் பாளையம் போகும் வண்டி

## மதிப்பீடு

### குறுவினா

1. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?
2. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

### சிந்தனை வினா

நீங்கள் மிகவும் விரும்பிப் பார்த்த இடம் ஒன்றினை இயல்பு நவிற்சியாகவும் உயர்வு நவிற்சியாகவும் விவரிக்க.

## மொழியை ஆள்வோம்

### கேட்க.

மனித நேயத்தை வளர்க்கும் கதைகளைப் பெற்றோர், ஆசிரியரிடம் கேட்க.

### பேசுக.

1. உங்கள் மீது அதிகம் அன்பு செலுத்துபவர்கள் யார்? நீங்கள் யார்யார் மீது அன்பு வைத்திருக்கிறீர்கள்? காரணம் கூறுக.
2. நீங்கள் ஒருவருக்குப் பரிசு கொடுக்க விரும்பினால் யாருக்குக் கொடுப்பீர்கள்? என்ன கொடுப்பீர்கள்? எதற்காகக் கொடுப்பீர்கள்?
3. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றி மூன்று மணித்துளிகள் பேசுக.

அ) பொதுநலம்　　　ஆ) சமூகத்தொண்டு

### படித்து உணர்க.

செல்வி பள்ளிக்கூட மைதானத்தில் அமர்ந்து இருந்தாள். அங்கு ஓடி வந்த முத்து, "செல்வி, உன்னைத் தலைமை ஆசிரியர் அழைக்கிறார்" என்று கூறியவாறே அவளுடைய சக்கர நாற்காலியைத் தலைமை ஆசிரியர் அறையை நோக்கித் தள்ளிக் கொண்டு போனான். தலைமை ஆசிரியர் செல்வியை ஆறாம் வகுப்பிற்கு அழைத்துச் சென்றார்.

வகுப்பறைக் கதவு மூடப்பட்டிருந்தது. கதவைத் திறந்ததும் மாணவர்கள் அனைவரும் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர். மெழுகுவர்த்திகள் ஒளி வீசின. காகிதத் தோரணங்களால் வகுப்பறை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. பலூன்கள் 'பட்பட்' என வெடித்தன. மாணவர்கள் அவளுக்குப் பிறந்த நாள் வாழ்த்துப் பாடினர். செல்வியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

### சொல்லக் கேட்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| மனிதநேயம் | கடுக்கன் | பசிப்பிணி | அன்னைதெரசா |
| நோபல் பரிசு | கைலாஷ் சத்தியார்த்தி | தொழிலாளர் | உறுப்புதானம் |
| ஹிதேந்திரன் | இயல்பு நவிற்சி | | |

### அகரவரிசைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| ஒழுக்கம் | உயிர் | ஆடு | எளிமை |
| அன்பு | இரக்கம் | ஓசை | ஐந்து |
| ஈதல் | ஊக்கம் | ஏது | ஔவை |

### கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதை எழுதுக.

அ) அன்பு ஆ) நட்பு இ) உதவி

### பத்தியைப் படித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

அரசர் ஒருவர் தன் மக்களிடம் 'அமைதி' என்றால் என்ன என்பதை விளக்கும் வகையில் ஓவியமாக வரைந்து கொடுப்பவர்களுக்கு மிகச்சிறந்த பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இதையடுத்து நாட்டின் முன்னணி ஓவியர்கள் அமைதியை வெளிப்படுத்தும் வகையில் பல ஓவியங்களை வரைந்து அரண்மனைக்குக் கொண்டு வந்தனர். அரசர் ஒவ்வொரு ஓவியமாகப் பார்த்துக் கொண்டே வந்தார். அழகிய மலையின் அடிவாரத்தில் ஓர் ஏரி இருப்பது போல் ஓவியம் ஒன்று இருந்தது. அது மிகவும் சிறப்பாக இருந்தது. பார்த்த உடனே பறிக்கத் தூண்டும் வகையில் மலர்களின் ஓவியம் ஒன்று இருந்தது. இப்படி ஒவ்வொருவரும் அமைதியைத் தங்களுக்குத் தோன்றியபடி ஓவியத்தில் வெளிப்படுத்தி இருந்தனர். ஓர் ஓவியத்தில் ஒரு மலைமேல் இருந்து ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியின் படம் வரையப்பட்டிருந்தது. அதிலேயே இடியோடு மழை கொட்டிக் கொண்டு இருந்தது.

சற்று உற்றுப் பார்த்தால் அருவியின் கீழே இருந்த மரம் ஒன்றில் பறவைக் கூட்டில் பறவை ஒன்று தனது குஞ்சுகளோடு இருந்தது.

"இந்த ஓவியத்தை வரைந்தது யார்?" என்று அரசர் கேட்டார். அந்த ஓவியர் வந்தார். "இந்த ஓவியத்தில் அமைதி எங்கே இருக்கிறது?" என்றார் அரசர். அதற்கு ஓவியர் "மன்னா பிரச்சினையும் போராட்டமும் ஆரவாரமும் இல்லாத இடத்தில் இருப்பது அமைதி அன்று. இவை எல்லாம் இருக்கும் இடத்தில் இருந்தும், எதற்கும் கலங்காமலும், தன்னை எதுவும் பாதிக்க விடாமலும் உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி" என்றார்.

1. அமைதி என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவது என்ன?
2. இக்கதையில் அமைதி எங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது?
3. நீங்கள் இந்த ஓவியப் போட்டியில் பங்கு பெற்று இருந்தால் என்ன ஓவியம் வரைந்து இருப்பீர்கள்?
4. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## மொழியோடு விளையாடு

கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | எங்கள் ஊரில் மழை | பெய்கிறது<br>பெய்யும்<br>பெய்தது |

இவை போன்று மூன்று காலங்களையும் காட்டும் சொற்றொடர்களை அமைக்க.

கட்டங்களில் மறைந்துள்ள அணிகலன்களின் பெயர்களை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| க | ணி | மோ | பு | வ |
| ம் | ம | தி | ம் | ளை |
| ம | ளா | ர | ல | ய |
| ல் | சூ | ம் | சி | ல் |
| க | டு | க் | க | ன் |

எ.கா. கம்மல்

## நிற்க அதற்குத் தக...

### என் பொறுப்புகள்

1. நான் எல்லாரிடமும் அன்பு காட்டுவேன்.
2. உறுப்பு தானத்தின் இன்றியமையாமையை எனக்குத் தெரிந்தவர்களிடம் எடுத்துச் சொல்வேன்.
3. பிறருக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்வேன்.
4. பிற உயிர்களைத் துன்புறுத்த மாட்டேன்.
5. எப்போதும் மனிதநேயத்துடன் நடந்து கொள்வேன்.

### கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| மனிதநேயம் | - | *Humanity* |
| கருணை | - | *Mercy* |
| உறுப்பு மாற்று அறுவைசிகிச்சை | - | *Transplantation* |
| நோபல் பரிசு | - | *Nobel Prize* |
| சரக்குந்து | - | *Lorry* |


## இணையத்தில் காண்க

உடல் உறுப்புத்தானம் குறித்த செய்திகளை இணையத்தில் தேடி அறிக.

## இணையச் செயல்பாடுகள்

### முதலுதவி




படிநிலைகள்:

⇒ கொடுக்கப்பட்ட உரலியைப் பயன்படுத்தி, இணையத்திலிருந்து 'First Aid' என்னும் செயலியைப் பதிவிறக்கி, நிறுவிக்கொள்ளவும்.

⇒ 'First Aid' செயலியைத் திறந்ததும், 'Emergency, Instructions, Call' போன்ற தெரிவுகள் இருக்கும், அதில் எமெர்ஜென்சி என்னும் தலைப்பின் கீழிருக்கும் பல்வேறு உடல்நலக் குறைபாடுகளில் BURNS என்பதைத் தேர்வு செய்யவும்.

⇒ தற்போது தீக்காயங்களுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி அறிவுரைகள் பட்டியலிடப்பட்டிருப்பதைத் தெரிந்து கொள்ளவும்.

⇒ மீண்டும் முதல் பக்கத்திற்குச் சென்று 'Instructions' என்பதைத் தேர்வு செய்து, அதில் CPR என்னும் முதலுதவி செய்வதற்கான படிமுறைகளைத் தெரிந்து கொள்ளவும்.




'முதலுதவி' காண்பதற்கான உரலி:

https://play.google.com/store/apps/details?id=org.indianredcross.firstaid&hl=en

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே

## திருக்குறள்

## கள்ளாமை (29)

1) எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

2) உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

3) களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

4) களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

5) அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

6) அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

7) களவுஎன்னும் கார்அறி வாண்மை அளவுஎன்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

8) அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.

9) அளவுஅல்ல செய்துஆங்கே வீவர் களவுஅல்ல
மற்றைய தேற்றா தவர்.

10) கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

## இன்னா செய்யாமை (32)

1) சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

2) கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

3) செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

4) இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

5) அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை.

6) இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

7) எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

8) தன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

9) பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

10) நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

## கொல்லாமை (33)

1) அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

2) பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

3) ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

4) நல்ஆறு எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

5) நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

6) கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று.

7) தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.

8) நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்
கொன்றுஆகும் ஆக்கம் கடை.

9) கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

10) உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

## ஊக்கமுடைமை (60)

1) உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதுஇல்லார்
உடையது உடையரோ மற்று.

2) உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.

3) ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துஉடை யார்.

4) ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

5) வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

6) உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

7) சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

8) உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

9) பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10) உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார்
மரம்மக்கள் ஆதலே வேறு.

www.tntextbooks.in

## பெரியாரைப் பிழையாமை (90)

1) *ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
*போற்றலுள் எல்லாம் தலை.*

2) *பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்*
*பேரா இடும்பை தரும்.*

3) *கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்*
*ஆற்று பவர்கண் இழுக்கு.*

4) *கூற்றத்தைக் கையால் விளித்துஅற்றால் ஆற்றுவார்க்கு*
*ஆற்றாதார் இன்னா செயல்.*

5) *யாண்டுச்சென்று யாண்டும் உளர்ஆகார் வெந்துப்பின்*
*வேந்து செறப்பட் டவர்.*

6) *எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
*பெரியார்ப் பிழைத்துஒழுகு வார்.*

7) *வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்*
*தகைமாண்ட தக்கார் செறின்.*

8) *குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு*
*நின்றுஅன்னார் மாய்வர் நிலத்து.*

9) *ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து*
*வேந்தனும் வேந்து கெடும்.*

10) *இறந்துஅமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்*
*சிறந்துஅமைந்த சீரார் செறின்.*

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும். அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் பருவத்திற்கு 50 குறட்பாக்கள் வீதம் மொத்தம் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி வைக்கலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான கதைகள், நாடகங்களை இலக்கியமன்ற கூட்டங்களில் நடத்தச் செய்யலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து "வினாடி வினா" நடத்தலாம்.
- உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

www.tntextbooks.in

## ஆறாம் வகுப்பு – தமிழ்
## ஆக்கம்


ஆலோசனைக் குழு

**முனைவர் பா. வீரப்பன்**
பேராசிரியர், தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுடில்லி.

**முனைவர் டி. சகாய தாஸ்**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கேரளா.

மேலாய்வாளர் குழு

**முனைவர் இராம. பாண்டுரங்கன்**
இணை இயக்குநர் (ஓய்வு), மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

**முனைவர் ச. மாடசாமி**
பேராசிரியர் (ஓய்வு), சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்**
எழுத்தாளர்.

**திருமதி ஏ.எஸ். பத்மாவதி**
எழுத்தாளர், சென்னை.

**திரு. ம. இராமகிருட்டினன்**
முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

பாட வல்லுநர் குழு

**முனைவர் வி. கிருஷ்ணன்**
தமிழ்த்துறைதலைவர், அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை.

**முனைவர் காசி. மாரியப்பன்**
இணைப் பேராசிரியர், பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சி.

**முனைவர் பா. முத்துசாமி**
உதவிப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

**முனைவர் மா. வெங்கடேசன்**
இணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி (ஆடவர்), கிருஷ்ணகிரி.

**முனைவர் கவிதா ராணி**
இணைப்பேராசிரியர், லேடி டோக் கல்லூரி, மதுரை.

**முனைவர் அ. மணமலர்ச்செல்வி**
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அரியலூர் மாவட்டம்.

### கலை மற்றும் வடிவமைப்புக்குழு

வரைபடம்

**திரு. இளையராஜா**

**திரு. இளையபாரதி**

**திரு. கோபு சுப்பையன்**

**திரு. பி. தனபால்**
ஓவிய ஆசிரியர், M.CT. RM. இராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி, குழிபிறை, புதுக்கோட்டை மாவட்டம்.

**திரு. சோ.வேல்முருகன்**
ஓவிய ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

**திரு. ஏ.முத்துக்குமரன்**
ஓவிய ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

**திரு. என். கோபாலகிருஷ்ணன்**
ஓவிய ஆசிரியர், குமார ராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி, காந்தி நகர், அடையார், சென்னை.

**திரு. கா. தனஸ் தீபக் ராஜன்**

**திரு. கா .நலன் நான்சி ராஜன்**

**திரு. ம.சார்லஸ்**
மாணவர்கள்,அரசு கவின் கலை கல்லூரி, சென்னை மற்றும் கும்பகோணம்

பக்க வடிவமைப்பாளர்

பழையவலம் பா. இராமநாதன்
வி2இனோவேஷன்ஸ், சென்னை

தரக் கட்டுப்பாடு

திரு. கோபு சுப்பையன்
திரு. எம். கரண்

நன்றி

**கோபுலு, மருது, லதா**
ஒருங்கிணைப்பாளர்
ரமேஷ் முனிசாமி

தட்டச்சர்

திருமதி **இரா.வித்யா**
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

அட்டைப்படம்

கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

பாடநூலாசிரியர் குழு

**திரு. ம. பாலசுப்பிரமணியம்**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம். கரூர்.

**திருமதி .சொ. இராஜலஷ்மி**
பட்டதாரி ஆசிரியர், நகராட்சி மேல்நிலைப் பள்ளி, சேலையூர், தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**திரு. த. ஜீவானந்தம்**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அட்டப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

**திரு. சிவ. முரளி**
பட்டதாரி ஆசிரியர், ஜே.எப்.மேல்நிலைப் பள்ளி, புலிவலம், திருச்சி மாவட்டம்.

**புலவர் கு. சம்பந்தம்**
முதுகலை ஆசிரியர் (ஓய்வு), டி.ஆர்.பி.சி.சி.சி இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

**திருமதி சிவ. அன்புச்செல்வி**
முதுகலை ஆசிரியர், பெ.கா.அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.

**புலவர் தமிழ். திருமால்**
முதுகலை ஆசிரியர், திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

**முனைவர் செ. தாரகேஸ்வரி**
முதுகலை ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கே.வி.குப்பம், வேலூர் மாவட்டம்.

**திரு. மொ. மருதமுத்து**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, இ.கீரனூர், கடலூர் மாவட்டம்.

**திருமதி ஆர். சந்திரா**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, மேடவாக்கம், சென்னை.

**திருமதி ஐ.சா. மேபல் ஜெசி சந்திரா**
பட்டதாரி ஆசிரியர், சி.சி.எம்.ஏ.அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ராஜாதெரு, கோவை.

**திரு. ந. தமிழ்க் காவலன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, அடியக்கமங்கலம், திருவாரூர் மாவட்டம்.

**திருமதி மு. கீதா**
இடைநிலை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சந்தைபேட்டை, புதுகோட்டை மாவட்டம்.

**திருமதி ச. சாந்த சுந்தரி**
பட்டதாரி ஆசிரியர், ஆர்.கே.ஸ்ரீ. ரங்கம்மாள் கல்வி நிலையம், கோவை.

**திருமதி ரெ. விமலா தேவி**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, சிறுமலை ராயபுரம், திண்டுக்கல் மாவட்டம்.

**திருமதி ஆ. கலைவாணி**
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காளம்பாளையம், கோவை மாவட்டம்.

**திருமதி நா. ஜானகி**
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சின்னத்தடாகம், கோவை மாவட்டம்.

**முனைவர் ஆ. சக்தி வடிவு**
முதுகலை ஆசிரியர், அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

**திருமதி வசந்தா**
பட்டதாரி ஆசிரியர், பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரம்(CBSE), கீழ்பாக்கம், சென்னை.

**திருமதி ஜே.பி.ஆர். வீனா ஜீடியா**
பட்டதாரி ஆசிரியர், டி.ஏ.வி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கோபாலபுரம், சென்னை.

**திரு. மா. பழனி**
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சின்னப்பள்ளத்தூர், பென்னகரம், தருமபுரி மாவட்டம்.

**திருமதி ப. சித்ரகலா**
பட்டதாரி ஆசிரியர், சின்மயா வித்யாலயா (CBSE), சின்மயா நகர், விருகம்பாக்கம், சென்னை.

**முனைவர் ந. சுரேஷ்ராஜன்**
பட்டதாரி ஆசிரியர், புனித வளனார் அரசு மேல்நிலைப் பள்ளி, மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம்.

**திரு. ப்ரகாஷ்**
ஆசிரியப் பயிற்றுநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், நாமக்கல்.

**திரு. இ. அப்துல்க:பூர்**
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,தேவர் சோலை, நீலகிரி மாவட்டம்.

வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

**முனைவர் நா. அருள்முருகன்**
துணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

**திருமதி மு. செல்வி**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, சேரி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்